Volume-12 Issue-04 October-2025
Price Rs. 25

# அருள் ராஜயோகம்

மலர் -12 இதழ் - 04 அக்டோபர்-2025

★ ஆன்மீகம் ★ ஜோதிடம் ★ மருத்துவம் ★ மாதஇதழ்



SRJ "ராஜயோகம்"
Dr. K.ராம் Ph.D., (USA)

## தீபாவளி சிறப்பிதழ் !

"ஒரு மனிதனை யார் கைவிட்டாலும்
ஆன்மீகம் கைவிடாது!"

– Dr. K.ராம் Ph.D., (USA)

இம்மாத வெளியீடு

# இப்போது விற்பனையில்..!




ஓர் ஆண்டின் 366 நாட்களுக்குரிய திருத்தலங்களின் ஸ்தல வரலாறுகள், ஸ்தல பரிகார குறிப்புகள், ஸ்தலத்திற்கு உரிய மந்திரங்கள், ஸ்தலத்தின் பூஜைக்குரிய விளக்கங்கள், ஸ்தல அமைவிடம், வழித்தடங்கள் அத்தனையும் தாங்கி அரிய படைப்பாக போற்றி பாதுகாக்க வேண்டிய அரிய பொக்கிஷம் இதுவே!

தவற விடாதீர்கள்..!

இன்றே வாங்குங்கள்..!

நமது பதிப்புகள் அனைத்தும் கிடைக்கும் இடங்கள்

Publishers:

**APSARA PUBLICATIONS**, # 18/67, P.V.Koil 1st Street, Pudupet, Royapettah, Chennai - 600 014
Phone: 044- 2811 6770 | Cell: 72999 21880 / 88386 38900
E-mail: apsarapublications@gmail.com | www.apsaraepublications.com

**விஜயா பதிப்பகம்**
20, இராஜ வீதி, டவுன் ஹால், கோவை -1. போன்: 0422- 2394614, 2382614, செல்: 90470 87058
மற்றும் அனைத்துக் கிளைகளிலும் கிடைக்கும்

**ஸ்ரீ தயவு சித்தாஸ்ரமம்** திருவண்ணாமலை - 606 603. செல்: 99448 00220

அருள் ராஜயோகம்
Volume-12 Issue-4 October 2025
மலர் – 12 இதழ் – 4 அக்டோபர்-2025
●ஆன்மிகம் ●ஜோதிடம் ●மருத்துவம் ●மாதஇதழ்




**அன்புள்ளம் கொண்ட வாசக வாசகியர்களுக்கு,**

ஆழமான ஆன்மீகத்தையும் அறியவேண்டிய சாஸ்திரத்தையும் அற்புதமான மனோதிடத்தையும் வாரி வழங்கும் அருள் ராஜ யோகம் என்கிற அற்புதமான ஆன்மீக மாத இதழை பார்க்கக்கூடிய படிக்கக்கூடிய வாய்ப்பு கிடைத்த பாக்கியவான்கள் ஆகிய உங்களுக்கு குலதெய்வ ஆசியும் நவகிரக அனுகிரகமும் முழுமையாக கிடைக்கவும் நாளும் பொழுதும் நன்மைகள் பெருகவும் உண்மையாக பிரார்த்திக்கின்றேன்.

அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகளை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.அனைத்து மக்களும் கொண்டாடி மகிழும் பண்டிகைகளில் குறிப்பிட வேண்டியது தீபாவளிப் பண்டிகை ஆகும்.தீபாவளி என்பது குழந்தைகள் மிகவும் விரும்பி கொண்டாடும் பண்டிகை. தீபாவளி அன்று புதிய ஆடை உடுத்தி, பட்டாசு வெடித்து அந்த நாளினை மகிழ்ச்சியாகக் கொண்டாடுவார்கள்.

ஸ்ரீகிருஷ்ணர் நரகாசுரனை அவனது கொடுமைகள், இம்சைகள் தாங்காது அழித்த நேரத்தில் நரகாசூரன், தீயவனான நான் சாகும் இந்த நாளை மக்கள் எப்போதும் மகிழ்ச்சியாக கொண்டாட வேண்டும் என்று வரமாகக் கேட்டான். அதன்படியே தீபாவளி கொண்டாடப்படுவதாக வரலாறு ஒன்றுண்டு.

இந்த இதழை தீபாவளிச், ஆயுதபூஜை, மற்றும் சரஸ்வதி பூஜை மற்றும் ஸ்ரீ கந்தசஷ்டி விரதம் சிறப்பிதழாகக் கொண்டு வருவதில் மகிழ்கின்றோம். எனவே இந்த இதழ் சிறப்பானதாக இருக்கும். இதனை அனைவரும் விரும்புவீர்கள் என நம்புகின்றேன்.

**நெஞ்சிற்கினிய நேயர்களே!**

ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது என்ற என்னுடைய ஆழமான ஆன்மிகத்தையும் பதிவு செய்து அகில உலகத்தில் உள்ள அத்தனை தெய்வங்களின் அனுக்கிரகமும் ஈரேழு உலகத்தின் உள்ள எல்லா சக்திகளின் ஒட்டுமாத்த ஆசீர்வாதமும், உங்களுக்கும் உலக மக்கள் அனைவருக்கும் கிடைக்க வேண்டிய பிரார்த்தனையோடும் வாழ்த்துக்களோடும்.




**ஆசிரியர்**
**SRJ “ராஜயோகம்”**
**Dr. K.ராம் Ph.D., (USA)**



# சிறப்புக் கட்டுரை:

# குரு நீச்சம் பெற்றால் குடும்ப வாழ்க்கையை பாதிக்குமா?






**உலகெங்கும் வாழும் ராஜயோகம் வாசகர்களுக்கு அன்பு வணக்கம். அனைவருக்கும் முதலில் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்.**

கடந்த சில மாதங்களாக, ஒவ்வொரு கிரகமும் எந்த இடத்தில் நீச்சம் ஆகிறது, அப்படி நீச்சம் பெற்றது என்றால் அந்த கிரகத்தினுடைய திசை வரக்கூடிய காலங்களில் எந்த மாதிரியான பாதகமான பலன் வந்து உங்கள் காரியங்களில் ஜெயம் கிடைக்கக்கூடிய விஷயங்களில் தடை ஏற்படுகிறது என்கிற விஷயத்தை விரிவாக பார்த்துக் கொண்டு இருக்கிறோம்.

அந்த வகையில் இந்தக் கட்டுரையில் நாம் பார்க்கவிருப்பது குரு பகவான் ஒருவருடைய ஜாதகத்தில் நீச்சம் பெற்றார் என்றால், அந்த ஜாதகருக்கு எந்த மாதிரியான பலாபலன்கள் ஏற்படும் என்பதை விரிவாக தெரிந்து கொள்வதற்கு முன்பாக, நவக்கிரகங்களில் சுபக்கிரகமாக விளங்கக்கூடிய குருபகவான் பற்றி அறிந்து கொள்ளுங்கள்.

நவக்கிரகங்களிலேயே அனைத்து ராசிகளுக்கும் ஓரளவு அனுக்கிரகமாக விளங்கக்கூடிய குருபகவான் நவக்கிரக ங்களிலேயே புத்திரகாரகராகவும், தனகாரகராகவும் சொர்ணத்துக்கு அதிபதியாகவும் திகழக்கூடியவர்.

இந்த குருபகவான் ஒருவருடைய ஜாதகத்தில் மீனம் ராசியில் இருந்தார் என்றால் அது அவரது சொந்த வீடு என்று சொல்லக்கூடிய ஆட்சி வீடு என்று சொல்லக்கூடிய தகுதி குருபகவானுக்கு கிடைக்கிறது. அதே குருபகவான் தனுசு ராசியில் இருந்தார் என்றால், தனுசு ராசியும் குரு பகவானுக்கு சொந்த வீடாக, ஆட்சி வீடாக



**இந்த குருபகவான் ஒருவருடைய ஜாதகத்தில் நீச்சம் என்கிற அமைப்பு எந்த ராசிக்கு வரும் என்று கேட்டால், இந்த குருபகவான் மகர ராசிக்கு வரும் பொழுது குரு பகவானுக்கு நீச்சம் என்கிற அமைப்புக்கு வந்தது என்பது எதார்த்தம்.**

சாஸ்திரத்தில் வரைமுறையோடு கொடுக்கப்பட்டு இருக்கிறது.

இப்படிப்பட்ட இந்த குருபகவான் புத்திரகாரகர் என்று பூரணமாக அழைக்கப்படுகிற இந்த குருபகவான், கடக ராசிக்கு வரும்போது உச்சம் என்கிற மிகப்பெரிய அமைப்புக்கு அச்சம் இல்லாமல் அமைகிறது.

12 ராசிகளில் எந்த ராசிக்குப் போனாலும் நட்பு அல்லது பகை அல்லது ஆட்சி என எப்படி இருந்தாலும், கடக ராசிக்கு வரும்போது மட்டும் தான், தன்னுடைய கோட்சாரத்தில் பனிரெண்டு வருஷத்துக்கு ஒருமுறை கடக ராசிக்கு வரும்பொழுது அந்த குருபகவானுக்கு மிகப்பெரிய யோகமும், மிகப்பெரிய உச்சமும் அவர்கள் அமைப்பில் இருப்பதாக சாஸ்திரம் சொல்லி வைத்து இருக்கிறது.

இப்படியெல்லாம் சிறப்புகள் பெற்ற இந்த குருபகவான் ஒருவருடைய ஜாதகத்தில் நீச்சம் என்கிற அமைப்பு எந்த ராசிக்கு வரும் என்று கேட்டால், இந்த குருபகவான் மகர ராசிக்கு வரும் பொழுது குரு பகவானுக்கு நீச்சம் என்கிற அமைப்புக்கு வந்தது என்பது எதார்த்தம். ஒரு ஜாதகத்தில் குருபகவான் நீச்சம் பெற்றார் என்றால் என்ன என்பது பற்றி என்னுடைய டி.வி. நிகழ்ச்சிகளில் கடந்த பல வருடங்களாக சொல்லிக் கொண்டு வருகிறேன்.

அதாவது ஒருவருடைய ஜாதகத்தில் எந்த கிரகம் எப்படி கெட்டுப் போயிருந்தாலும் குருபகவான் ஒருவர் மட்டுமே உங்கள் ஜாதகத்தில் நல்ல நிலைமையில் இருந்தார் என்றால் உங்களுடைய வாழ்க்கையில் நீங்கள் நல்ல நிலைமையைக் கண்டிப்பாக நன்மையான வகையில் அடைய முடியும் அல்லது அனுபவிக்க முடியும் என்பது என்னுடைய அனுபவ உண்மை என்பதை நிறைய முறை உங்களுடன் பகிர்ந்து இருக்கிறேன்.

அந்த வகையில் இப்படிப்பட்ட சிறப்பு பெற்ற இந்த குருபகவான், குரு பார்க்க கோடி நன்மை என்று சொல்லக்கூடிய இந்த குருபகவான் ஒருவருடைய வாழ்க்கையில், திருமணம் சம்பந்தப்பட்ட விஷயமாக இருந்தாலும் சரி, சுப காரியமாக இருந்தாலும் சரி, சொந்த தொழில் ஆரம்பிக்கிறதாக இருந்தாலும் சரி, ஒரு வெளிநாட்டுப் பயணமாக இருந்தாலும் சரி அல்லது வியாபாரமாக இருந்தாலும் சரி, எந்த ஒரு நல்ல காரியத்தையும், ஒரு வண்டி அல்லது வாகனம் வாங்குவதாக இருந்தாலும் சரி, அல்லது ஒரு வீடு வாங்குவதாக இருந்தாலும் சரி அந்த வீட்டுக்கு கிரகப்பிரவேசம் செய்வதாக இருந்தாலும் சரி இவை எல்லாவற்றுக்குமே குருபலம் இருக்கும்போது நடந்தது என்றால் அந்த காரியம் கண்டிப்பாக மிகப்பெரிய பலமாக அடுத்து வரக்கூடிய காலங்களில் உங்களுக்கு ஜெயமாக வாழ்வு என்ற விஷயத்தில் மிகப்பெரிய நலமாக, வளமாக அமையும் என்பது திண்ணம். அப்படிப்பட்ட குரு பகவான் ஒருவருடைய ஜாதக





த்தில் மகர ராசியில் இருந்தார் என்றால் அந்த ஜாதகருக்கு நல்ல விஷயம் நடக்கக்கூடிய எந்த ஒரு விஷயத்திலும் தடை ஏற்படும். சாதாரணமாக ஒரு சிறிய வீடு வாடகைக்கு பிடித்து அந்த வீட்டில் பால் காய்ச்சப் போனால் கூட ஏதாவது ஒரு வழியில் தடைகள் ஏற்படுவது, தேவையில்லாத தாமதத்தைக் கொடுத்து இருக்கிறது. குடும்பத்தில் மகிழ்ச்சியே இல்லாமல் சந்தோசமாக இருக்க வேண்டிய அந்த குடும்பத்தில் தேவையில்லாத சந்தேகம், தேவையில்லாத சஞ்சலம், தேவையில்லாத ஒரு சச்சரவு ஏற்படக்கூடிய சூழலை இந்த குருபகவான் கொடுக்கிறார் என்பது தான் உண்மையான விஷயமாக இருக்கிறது. அதாவது ஒரு நாள் 24 மணி நேரத்தில் பார்த்தீர்கள் என்றால் காலை நேரம், மதிய நேரம், மாலை நேரம், அந்தி நேரம், நடுநிசி நேரம், நல்ல நேரம், கெட்ட நேரம், குளிகை நேரம் என பல்வேறு விஷயங்கள் இருந்தால் கூட எந்த நேரமாக இருந்தாலும் அந்த நேரத்தை நல்ல நேரமாக மாற்றி காட்டக்கூடிய ஒரே தகுதி இந்த குருபகவானுக்கு உள்ளது குதூகலமான விஷயம்.

இந்த குருபகவான் நீச்சமாகி இருந்தால், உங்களுக்கு நல்ல நேரமாக இருந்தாலும், எம கண்டமாக இருந்தாலும் ஒரே மாதிரி தெரியக்கூடிய அமைப்பாக இருக்கும் என்று சொல்லப்படுவது எதார்த்தமான விஷயமாக இருந்து கொண்டு இருக்கிறது. மகர ராசியில் குருபகவான் அமர்ந்து நீச்சம் பெற்றார் என்றால் அந்த ஜாதகருக்கு, சின்ன வயதில் கிடைக்க வேண்டிய கல்வியாக இருந்தாலும் தடை ஏற்படுகிறது.

அடுத்து கிடைக்க வேண்டிய உத்தியோகமாக இருந்தாலும் தடைஏற்படுகிறது. அடுத்து நடக்க வேண்டிய திருமணமாக இருந்தாலும் தாமதம் ஏற்படுகிறது. அப்படி திருமணம் நடந்தால் கூட வழக்கமான வாழ்க்கையில் தேவையில்லாத குழப்பங்களைக் கொடுத்து விடுகிறது.

திருமணமாகி குழப்பத்தோடு வாழ்ந்தால்க்கூட குழந்தை பாக்கியத்தில் தடை ஏற்படுகிறது. அதாவது புத்திரகாரகராக குரு பகவான் இருப்பதால் இந்த புத்திர பாக்கியம் சம்பந்தப்பட்ட விஷயங்களில் கண்டிப்பாக தடைகளை கொடுத்து விடுவார் என்பது உண்மையான விஷயம்.

என்னுடைய ஆராய்ச்சியைப் பார்த்தீர்கள் என்றால், நவக்கிரகங்கள் பற்றி இந்தப் புத்தகத்தில் இப்படிப் போட்டு இருக்கிறது; அந்த சாஸ்திரத்தில் அப்படிப் போட்டு இருக்கிறது என்பதை விட என்னுடைய சொந்த முயற்சியில் சின்ன வயதில் இருந்தே நிறைய ஆராய்ச்சி செய்து இருக்கிறேன்.

உடன் படிக்கிறவர்களாக இருந்தாலும் சரி, சொந்த பந்தங்களாக இருந்தாலும் சரி, நான் பார்க்கக்கூடிய நபராக இருந்தாலும் சரி, அடிப்படை மனிதனாக இருந்தாலும் சரி, ஆடம்பரமாக உள்ளவராக இருந்தாலும் சரி, அரசியலில் பெரிய பதவியில் இருந்தாலும் சரி, அயல்நாட்டில் முதல் பதவியில் உள்ள அத்தனை பேர்களுக்கும் ஜாதகம் பார்க்கக்கூடிய மிகப்பெரிய தகுதியை பஞ்சபூதங்கள் எனக்கு தாரை வார்த்து கொடுத்தது இருக்கிறதால்,நான் உறுதியாகச் சொல்கிறேன். நான் பார்த்த வரைக்கும் பார்த்தீர்கள் என்றால் ஜாதகத்தில் குருபகவான் ஒருவருக்கு நீச்சமாக இருந்தது என்றால் அவருக்கு ஆண் குழந்தை பிறக்கிற புத்திரபாக்கியம் கிடைப்பது இல்லை என்பது தான் உண்மையான விஷயமாக இருந்து கொண்டு இருக்கிறது.

புத்திரகாரகன் குருபகவான் மகர ராசியில் நீச்சம் பெற்றிருந்தார் என்றால் அவருக்கு ஆண் வாரிசு என்று சொல்லக்கூடிய புத்திர பாக்கியம் கிடைப்பதில்லை அல்லது புத்திரபாக்கியம் கிடைப்பதில் தடைஏற்பட்டது, தாமதம் ஏற்பட்டது, நிறைய பேருக்கு புத்திரபாக்கியம் கிடைக்கவில்லை என்பது உண்மையான உறுதியான விஷயமாக இருந்து கொண்டு இருக்கிறது.

அதையும் மீறி ஒரு சிலருக்கு புத்திரபாக்கியம் கிடைக்கிறது. எதனால் கிடைக்கிறது? குரு நீச்சமானால் கூட புத்திரபாக்கியம் அந்த ஜாதகருக்கு கிடைப்பது எப்படி என்றால், குருபகவான் மகர ராசியில் நீச்சம் பெற்று இருந்தால் கூட மகர ராசிக்கு அதிபதியாக இருக்கக்கூடிய சனிபகவான் ஆட்சி பெற்று இருந்தால் அதனால் நீச்சபங்க ராஜயோகம் என்கிற அமைப்பில், அந்த ஜாதகருக்கு புத்திரபாக்கியம் கிடைக்கும் என்பது உறுதியான விஷயம்.

இதில் இன்னொரு விஷயம் என்ன தான் அந்த

புத்திர காரகன் குருபகவான் நீச்சமாக இருந்தால் கூட அந்த நீச்சம் பெற்ற ஸ்தானாதிபதி வந்து அதாவது நீச்சம் பெற்ற ராசி அதிபதி வந்து ஆட்சி, உச்சம், நட்பு வீட்டில் இருக்கும்போது

அல்லது ஸ்தான பலம் காட்டும் போது, அல்லது அம்சத்தில் இருக்கும் பொழுது அம்சம், திரேக்கானம் என அந்தக் கிரகம் நல்ல நிலையில் இருக்கும்போது அவருக்கு புத்திரபாக்கியம் கிடைக்கலாம். ஆனால் அந்த புத்திரன் மூலமாகக் கடைசி காலத்தில் அவருக்கு, நன்மையோ, மகிழ்ச்சியோ கிடைப்பதில்லை என்பதை நாம் நிரூபணமாகவே காணமுடியும்.

கடந்த காலத்தில் ஜாதகத்தில் ஈடுபாடு இல்லாதவருக்கு இதுபோன்ற விஷயங்களைச் சொல்லி இருந்தேன். அதை முதலில் ஏற்காதவர், தனது மகன் கடைசிக் காலத்தில் நடந்து கொண்ட விதத்தைப் பார்த்து அதை ஒப்புக் கொண்டார். கடவுள் உண்டு என்கிற விஷயத்தையும் ஏற்றுக் கொண்டார். அவர் வேற்று மதத்தைச் சார்ந்தவர். இதுபோல் கடவுளை நம்பாதவர்கள், சாமியே இல்லை என்பவருக்குக் கூட, ஜோதிடத்தை நம்பாத வர்களுக்குக் கூட சாஸ்திரம் பார்த்து, அவர்களுக்குப் பலன் சொல்லக்கைடிய, சாஸ்திரத்தில் நம்பிக்கை வரக் கூடிய மிகப்பெரிய தகுதியை ஆண்டவன் எனக்குக் கொடுத்து இருக்கிறார்.



எந்த ஜாதகத்தில் குரு பகவான் நீச்சம் என்றால் என்ன பலன் சொல்கிறோமோ, அதேபோல் எனது ஜாதகத்தில் குரு பகவான் மிகவும் உச்சத்தில் இருப்பதால் அச்சம் இல்லாமல் வெளிநாடுகளுக்கு முதல்தரமான பயணத்தை, விமானத்தில் செல்லக்கூடிய பாக்கியத்தை ஆண்டவன் எனக்குக் கொடுத்து இருக்கிறார் எனச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பொதுவாகவே உங்களுடைய ஜாதகத்தில் குரு நீச்சம் பெற்று இருக்கிறார் என்றால் அதற்காக லட்சக்கணக்கில் செலவு செய்து பரிகாரம் செய்வதை விட, வயதில் மூத்தவர்களுக்கு மரியாதை தர வேண்டும். குருவிற்கு மரியாதை தரவேண்டும். பெற்றவர்களுக்கு முதலில் மரியாதை செலுத்த வேண்டும்.

உத்தியோகத்தில் உங்களை விட ஒருநாள் அதிகமாக வேலை செய்தவர்களுக்குக் கூட மரியாதை கொடுங்கள். நேரடியாக மரியாதை தர முடியாவிட்டாலும் மனதார மரியாதை கொடுங்கள். நீங்கள் கல்வி கற்றுக் கொண்ட ஆசிரியர்களை வருடம் ஒரு முறையாவது சந்தித்து, கனி வகைகள் தந்து நமஸ்காரம் செய்யுங்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக நவக்கிரக சன்னிதியில் உள்ள குரு பகவானுக்கு கொண்டக்கடலை மாலை சாற்றுங்கள். அல்லது சாதாரணமாகவே குருபகவானை நமஸ்காரம் செய்து கொள்ளலாம். மஞ்சள் வஸ்திரம் அணிவித்து நமஸ்காரம் செய்யலாம். பொதுவாகவே எந்த ஒரு கோவிலிலும், எந்தவொரு ஆன்மீகப் பெரியவரைப் பார்த்தாலும் மனதிற்குள் நமஸ்காரம் செய்யலாம். எந்த மதமாக இருந்தாலும், வயதில் மூத்தவர்களாக இருந்தால் அவர்கள் மனம் புண்படாமல் நடந்து கொள்ளுங்கள்.

உங்கள் ஜாதகத்தில் குருபகவான் நீச்சம் பெற்று இருந்தாலும், இவற்றைக் கடைப்பிடித்தால் உங்களுக்கு குருபகவான் மிகவும் நன்மையையே செய்வார். எது எப்படி இருந்தாலும், ஒரு மனிதனை, யார் கைவிட்டாலும், ஆன்மீகம் கைவிடாது என்ற, அனுபவ உண்மையோடு, அண்ட நிழலும் இல்ல, ஆதரிப்பார் யாருமில்லை என்ற நிலையில் உள்ளவர்களை, குலதெய்வம் கை விடுவதில்லை என்ற, என்னுடைய ஆழமான ஆன்மீகத்தையும் பதிவு செய்து, அகில உலகத்தில் உள்ள, அத்துணை தெய்வங்களின், அனுக்கிரகமும், ஈரேழு உலகத்தில் உள்ள, எல்லா சக்திகளின், ஒட்டுமொத்த ஆசீர்வாதங்களும், உலக மக்கள் அனைவருக்குமே, கிடைக்க வேண்டிய, பிரார்த்தனையோடும், வாழ்த்துக்களோடும்,

SRJ "ராஜயோகம்"
**Dr. K.ராம் Ph.D., (USA)**

# ஆயுதபூஜை வழிபாடு!

## பயன்படு கருவிகளுக்குப் படையல்

**பயன்படு கருவிகளுக்குப் படையல்' என்பது தொன்மைச் சமூகங்கள் கடைப்பிடிக்கும் ஒரு நடைமுறை. அதனுடைய தொடர்ச்சியே தற்போது ஆயுத பூஜையாகக் கொண்டாடப்படுகிறது. முதலில் வேட்டைக்கு பயன்படுத்தப்பட்ட கற்கோடரிகள் போன்ற கற்கருவிகள், வேளாண்மைக்குப் பயன்படுத்தப்பட்ட உழவுக்கலப்பை போன்ற கருவிகள், போருக்கு பயன்படுத்தப்பட்ட வாள், வேல், வில் போன்ற கருவிகளை வழிபடும் முறை ஆதி காலம் தொட்டே இருந்துவருகிறது.**

'கருவிகள்' வெறும் வேட்டையாடலு க்கானது மட்டும் அல்ல. தொன்மை வரலாற்றை அறிந்துகொள்ள உதவும் சான்றுகளாகவும் இருக்கின்றன. உதாரணமாக, `சென்னை அத்திரப்பாக்கத்தில் கிடைத்த பண்டைய கற்கோடரிகள் கிட்டத்தட்ட 16 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் பயன்படுத்தப்பட்டவை' என்று வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பண்டைய மனிதர்களின் இறந்த உடல்களோ, எலும்புகளோ, அவர்கள் பயன்படுத்திய



பொருள்களோ கிடைக்காத இடங்களில்கூட அவர்கள் வேட்டையாடிய கற்கருவிகள் அதிகமாகக் கிடைத்திருக்கின்றன. அந்தக் கருவிகளில் படிந்திருக்கும் ரத்தக் கறைகளை வைத்துதான் அவர்கள் வாழ்ந்த காலத்தைக் கணக்கிடுகிறார்கள் ஆய்வாளர்கள். கற்காலம் முதல் இக்காலம் வரை மனிதனை வாழவைத்துக்கொண்டிருப்பது கருவிகளே. அதன் பரிணாம வளர்ச்சியே இன்று இயந்திரங்களாக மாறி இருக்கின்றன.

வில், அம்பு, வேல், அரிவாள், ஆண்டலையடுப்பு, ஈர்வாள், உடைவாள், கதிரருவாள், கதை, கவை, கல்லிடு கூடை, கணையம், கழுகுப்பொறி, கவசம், குத்துவாள், கைவாள், கொடுவாள், கோல், சிறுவாள், தகர்ப்பொறி, தொடக்கு, பிண்டிபாலம், ஞாயில், மழுவாள், விளைவிற்பொறி, அரிதூற்பொறி, இருப்பு முள், எரிசிரல், கழு, கருவிலூகம், கல்லமிழ் கவண், கற்றுப்பொறி, கழுமுள், குந்தம், கூன்வாள், கைபெயர், கோடாரி, சதக்கணி, தண்டம், தூண்டில், தோமரம், புதை, நாராசம், வஜ்ஜிரம் ஆகியவை சங்க காலத்தில் தொழிலுக்கும் போருக்கும் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள்.



தமிழர்களின் திணை வாழ்வில் கொற்றவை வழிபாடே முதன்மையானது. தமிழர்களின் தாய் தெய்வம் கொற்றவை. புரட்டாசி மாதம், அஸ்த நட்சத்திரத்தில் இருந்து திருவோண நாள் வரை பெண் தெய்வ வழிபாடு செய்யப்படுவது வழக்கம். அதில் ஒன்பதாம் நாளன்று போரில் வெற்றிபெற உதவும் ஆயுதங்களை வைத்து வழிபடும் நடைமுறையும் உண்டு. இதற்கு 'வாண்மங்கல விழவு', 'வாளுடை விழவு' என்று பெயர். இதுபற்றி சிலப்பதிகாரத்தில்,

**`கலையமர் செல்வி கடனுணின் அல்லது**
**சிலையமர் வென்றி கொடுப்போ ளல்லள்'**

என்ற பாடலில், `கொற்றவைக்குச் செய்யவேண்டிய சடங்குகளைச் செய்யாவிட்டால், அவள் வில்லுக்கு வெற்றி தர மாட்டாள்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனில் ஆயுத வழிபாடு என்பது பண்டைய தமிழரின் வழிபாட்டு முறை என்பது உறுதியாகிறது.

ஆயுதங்களை மட்டுமல்லாமல் போருக்குப் பயன்படுத்தப்பட்ட யானைகள், குதிரைகள், தேர் ஆகியவற்றைச் சுத்தப்படுத்தி மங்கல விழாவில் வழிபடுவது பற்றி பெரியபுராணத்தில்

**`பட்டவர்த் தனமாம் பண்பு**
**பெற்றவெங் களிறு கோலம்**
**பெருகுமா நவமி முன்னாள்**
**மங்கல விழவு கொண்டு**
**வருநதித் துறைநீ ராடி...'**

என்ற பாடலில் குறிப்பு இருக்கிறது. இதன் தொடர்ச்சிதான் இன்று வாகனங்களுக்கு பூஜை செய்யும் நடைமுறையாக தொடர்ந்துவருகிறது. தொல்காப்பியத்திலும் `மானார்ச் சுட்டிய வாண்மங்கலமும்' என்று ஆயுத வழிபாடு பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.போர் வீரர்கள் கேடயத்தையும் வாளையும் வாகைப் பூ மாலை சூடி வணங்கிய செய்தியை,

**'றொன்மிசைந் தெழுதரும் விரிந்திலங் கெஃகிற்**
**றார்புரிந் தன்ன வாளுடை விழவிற்**
**போர்படு மள்ளர் போந்தோடு தொடுத்த**
**கடவுள் வாகைத் துய்வீ யேய்ப்ப'**



என்ற பதிற்றுப்பத்து பாடல் மூலம் அறிய முடிகிறது. தமிழ் மூதாட்டி ஔவையாரும் ஆயுத வழிபாடு பற்றி அழகாகப் பாடியுள்ளார். பண்டையத் தமிழ் குறுநில மன்னர்களான அதியமானுக்கும் தொண்டைமானுக்கும் ஒருமுறை போர் மூளும் அபாயம் ஏற்பட்டது.

இதைக் கண்ட ஔவைக்கு நெஞ்சம் பதறியது. போரைத் தடுக்கும் பொருட்டு தொண்டைமானிடம் தூதுக்குச் செல்கிறார் ஔவை. அப்போது ஆயுத சாலையில் அத்தனை ஆயுதங்களுக்கும் மாலை சூடி வணங்கப்பட்டிருப்பதைக் கண்ட ஔவை,

**"இவ்வே, பீலி அணிந்து, மாலை சூட்டிக்**
**கண்திரள் நோன்காழ் திருத்தி, நெய் அணிந்து,**
**கடியுடை வியன்நக ரவ்வே : அவ்வே,**
**பகைவர்க் குத்திக், கோடுநுதி சிதைந்து,**
**கொல்துறைக் குற்றில மாதோ ; என்றும்**
**உண் டாயின் பதம் கொடுத்து,**
**இல் லாயின் உடன் உண்ணும்,**
**இல்லோர் ஒக்கல் தலைவன்,**
**அண்ணல்எம் கோமான், வைந் நுதி வேலே."**

இவ்வாறு பாடி அதியமானின் படைபலத்தைப் பற்றி மறைமுகமாக உணர்த்தியதாகவும், அதன்பின்னர் தொண்டைமான் சமாதானம் ஆனதாகவும் சொல்லப்படுகிறது. குலதெய்வங்களா கட்டும், காவல் தெய்வங்களாகட்டும் ஆயுதங்கள் இல்லாமல் யாரும் இல்லை. தெய்வங்களுக்கு படையலிடும் போது ஆயுதங்களுக்கும் சேர்த்தே படையலிடு கிறோம். முருகப்பெருமான் கூட கையில் வேலுடன்தான் காட்சிதருகிறார்.

வாகனங்களும்,\ஆயுதங்களும் இல்லாமல் காட்சி தரும் தெய்வங்கள் அரிது. ஆண்கள் மட்டும் இன்றி பண்டைய கால பெண்களின் வீரத்தைச் சொல்லும் வகையில் பெண்கள் கத்திச் சண்டையிடும் எண்ணற்ற சிற்பங்கள் கோயில்களில் இன்றும் உள்ளன.

பண்டைய காலங்களில் ஆயுதங்களை ஏன் வழிபட்டோம் என்பது பற்றி நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளர் சிவசுப்பிரமணியன் கூறுகிறார்...``கருவிகளை வழிபடுவது என்பது உலகளாவிய மரபு. படைக்கருவிகளுக்கு மட்டும் அல்ல... தொழில்கருவிகளும் இதில் அடக்கம். அதாவது ஒவ்வொரு கருவிக்குள்ளும் ஒரு அணங்கு இருக்கும் என்று நம்பப்படுகிறது. மானுடவியலில் இது அனிமிசம் (ஆன்ம வாதம்) என்று சொல்லப்படும். அந்த நம்பிக்கையின் அடிப்படையிலேயே ஆயுதங்களுக்குப் படையல் வைத்து வணங்கி வந்தார்கள். அதனுடைய தொடர்ச்சிதான் இன்று கருவிகளை வைத்து ஆயுதபூஜையாக வழிபடுவதும்.

இன்று துப்பாக்கிகளுக்குக்கூட பொட்டு வைத்து வணங்குகிறார்கள். என்னதான் விஞ்ஞானம் நவீன வளர்ச்சியை நோக்கிச் சென்றாலும் படையல் என்ற பண்டைய, பண்பாட்டு மரபு இன்னும் தொடர்ந்துகொண்டே இருக்கிறது என்பதற்கு இதுவே சான்று.''

நம்மை நாம் மேம்படுத்திக்கொள்ள தொழில் கருவிகளாகவும், நம்மை தற்காத்துக்கொள்ள போர்க் கருவிகளாகவும் ஆயுதங்கள் விளங்குகின்றன. பண்டைய தமிழ் மரபின்படி நமக்குப் பயன்படும் கருவிகளை வழிபடுவோம்... பாரம்பர்யத்தைப் போற்றுவோம்!

**– கோதை**



# நோய்களுக்கு தீர்வு தரும் சித்த மருத்துவம்!

மூச்சுக்கூட விடமுடியாமல் அதிகப்படியான இருமலாலும் சளியாலும் சிரமப்படும் குழந்தைகளுக்கு, குப்பை மேனியின் சாற்றைப் பிழிந்து சிறிதளவு கொடுத்தால் உடன் அனைத்துச் சளியும் வாந்தியாக வெளியில் வந்து விடும். ஆனால் சரியான அளவில் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் வயிற்றுப் போக்கு ஏற்படும்.

**உடல் பருமன் குறைய**

வெள்ளைப் பூசணிக் காயை எடுத்து ஜூஸ் பிழிந்து காலையில் குடித்து வந்தால் உடல் பருமன் குறையும். நெஞ்சு எரிச்சலும் வராமல் இருக்கும்.

**சிறுநீரகத்தில் உப்பு தங்காமல் இருக்க**

வாழைத்தண்டு, புடலங்காய், கீரைத் தண்டு, முள்ளங்கி, திராட்சை, வெங்காயம், வெள்ளரிப் பிஞ்சு, வெங்காயத்தாள் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றைத் தினமும் உணவில் சேர்த்துக்கொள்ளவும்.

**ரத்த அழுத்தம் குறைய**

செம்பருத்திப் பூக்கள் மூன்றை எடுத்து அவற்றின் இதழ்களைத் தண்ணீரில் போட்டு நன்றாகக் கொதிக்க வைக்கவும். பிறகு எடுத்துப் பிழிந்து வடிகட்டி, கொஞ்சம் பால் சேர்த்துச் சாப்பிட்டால் ரத்தஅழுத்தம் குறையும்.

**பித்தம் தலைசுற்றல்**

1 பிடி கொத்தமல்லித் தழையை அரைத்துச் சாறு எடுக்கவும். அதில் பனை வெல்லம் சேர்த்துச் சாப்பிட, தலைசுற்றல் போகும்.

**புழு வெட்டு, வழுக்கை**

1 கோப்பை நல்லெண்ணெ யில் 7, 8 பூண்டை நசுக்கிப் போடவும். அதை நன்றாகக் காய்ச்சவும். இறக்கி வைத்து 1 மூடி எலுமிச்சம் பழத்தில் சாறு பிழிந்து எடுத்துச் சேர்த்து வைக் கவும். பூச்சிவெட்டு இருக்கும் இடத்தில் 2 சொட்டு தேய்த்து வர, முடி வளர ஆரம்பிக்கும்.

**சர்க்கரை நோய் கட்டுப்பாட்டில் இருக்க**

நாவல் கொட்டை பொடி, வெந்தயப் பொடி, கடுக்காய் தோல் ஆகியவற்றில் சமபாகம் எடுத்துக் கலந்து வைக்கவும். கொதிக்கும் தண்ணீரில் இதை 1 ஸ்பூன் போட்டு நன்றாகக் கலந்து காலையில் கால் டம்ளர் குடிக்கவும்.

**வறட்டு இருமல், சூடு**

அதிமதுரம் பொடியை வாங்கி, 1 டம்ளர் நீரில் 1 ஸ்பூன் பொடி போட்டுக் கொதிக்க வைத்து, கொஞ்சம் பனங்கற்கண்டு சேர்த்துச் சாப்பிடவும்.

**வாயு, வயிற்றுவலி**

1 ஸ்பூன் ஜீரகத்தை வெறும் வாணலியில் நன்றாக வறுத்து 1 டம்ளர் தண்ணீர் விடவும். நன்றாகக் கொதித்ததும் பனைவெல்லம் சேர்த்துக் குடிக்கவும்.

**கர்ப்பப் பையில் நோய் வராமல் தடுக்க**

துளசி, வில்வம், அருகம்புல், மிளகு உள்ளிட்டவை நாட்டு மருந்துக் கடைகளில் பொடியாகவே கிடைக்கும். இவற்றை வாங்கிக் கலந்து வைத்துக்கொண்டு வாரத்துக்கு ஒரு நாள் 1 ஸ்பூன் பொடியை வெந்நீரில் கலந்து சாப்பிடவும்.

# ஞானத்தை வழங்கும் சரஸ்வதி பூஜை!




புரட்டாசி மாதத்தில் 9 நாட்கள் கொண்டாடப்படும் நவராத்திரி பண்டிகையானது, சார்தியா நவராத்திரி என்றும் அழைக்கப்படுகிறது. இது நாடு முழுவதும் பல்வேறு வழி முறைகளில் கொண்டாடப்படுகிறது. இது பன்முகத்தன்மை மற்றும் அதே நேரத்தில் ஒற்றுமையின் மகிழ்ச்சியையும் பிரதிபலிக்கிறது. இந்தியாவின் கிழக்கு, மேற்கு மற்றும் வடக்குப் பகுதிகளில், நவராத்திரி பண்டிகை துர்க்கை அம்மனின் 9 அம்சங்களை வழிபடுவதன் மூலம் கொண்டாடப்படுகிறது.

மேலும் நவராத்திரியின் இறுதி நாள் கொண்டாட் டமான தசரா, தீமைக்கு எதிரான நல்லதொரு வெற்றியை குறிக்கிறது. அதாவது துர்கா தேவி அரக்கனை வதம் செய்து மக்களுக்கு நன்மை செய்ததை குறிக்கிறது. தென்னிந்திய மாநிலங்கள் கேரளா, தமிழ்நாடு, நவராத்திரியின் கடைசி நாளான 9 வது நாளில் சரஸ்வதி தேவியை வழிபடுகின்றனர். தென்னிந்தியாவை பொறுத்தவரை, நவராத்திரியானது முப்பெரும் தேவியரை பூஜிக்கும் பண்டிகையாக கொண்டாடப்படுகிறது. நவராத்திரியின் முதல் 3 நாட்கள் துர்கை, அடுத்த 3 நாட்கள் லட்சுமி மற்றும் கடைசி 3 நாட்கள் சரஸ்வதி தேவியை வழிபடுவர்.

சரஸ்வதி தேவி அறிவு, இசை, கலை மற்றும் ஞானத்தின் தெய்வ ரூபமாக கருதப்படுகின்றனர். சரஸ்வதி தேவியானவள் மும்மூர்த்திகளின் ஒரு பகுதியை முப்பெரும் தேவிகளை உருவாக்குகிறார். குழந்தைகள் படிப்பில் சிறந்து விளங்கவும்,

**சரஸ்வதி தேவி அறிவு, இசை, கலை மற்றும் ஞானத்தின் தெய்வ ரூபமாக கருதப்படுகின்றனர். சரஸ்வதி தேவியானவள் மும்மூர்த்திகளின் ஒரு பகுதியை முப்பெரும் தேவிகளை உருவாக்குகிறார். குழந்தைகள் படிப்பில் சிறந்து விளங்கவும், புத்திசாலியாகவும், அறிவாற்றலுடனும் விளங்க தெய்வத்தின் ஆசிகளை நாடுகின்றனர்.**

புத்திசாலியாகவும், அறிவாற்றலுடனும் விளங்க தெய்வத்தின் ஆசிகளை நாடுகின்றனர்.

இந்து புராணங்களின்படி இந்த பிரபஞ்சத்தை உருவாக்கியவர் பிரம்மாவின் மனைவியான சரஸ்வதி என்று அறியப்படுகிறது. எனவே, நவராத்திரியின் கடைசி நாளில், அம்மன், மகா சரஸ்வதியாக வெளிப்படுவார் என்று நம்பப்படுகிறது. இந்த ஆண்டு, சரஸ்வதி பூஜை அக்டோபர் 12 ஆம் தேதி வருகிறது.



## சரஸ்வதி தேவியை வழிபடும் முறைகள்:

கொலு நவராத்திரி பண்டிகையின் இறுதி நாளான சரஸ்வதி பூஜையின் போது, மக்கள் சரஸ்வதி சிலை அல்லது படத்திற்கு பூஜை செய்கிறார்கள்.

நவராத்திரி பண்டிகையின் ஒரு பகுதியாக, வீடுகளில் 'கொலு' வைக்கும் பாரம்பரியம் வழக்கத்தில் இருந்து வருகிறது. கடவுள், தெய்வங்கள், விலங்குகள், பறவைகள், ஆன்மீக குருகள் மற்றும் கலைப்படைப்புகளின் சிறு உருவங்களை 5, 7, 9 ஆகிய ஒற்றை இலக்க படிகளை அமைத்து காட்சிக்கு வைப்பர்.

வெள்ளை நிற பொருட்கள் சரஸ்வதி தேவிக்கு வெண்ணிறம் மிகவும் உகந்தது. எனவே, வெள்ளை புடவை அணிந்து, வெண்ணிற அன்னப்பறவையை 'வாகனமாக' கொண்டிருக்கிறார். அவளை வணங்குவதற்கான விருப்பமான வழி என்றால், பெரும்பாலும் வெள்ளை பொருட்களைப் பயன்படுத்துவதே ஆகும். வெள்ளை நிற பூக்கள் ஒவ்வொரு நாளும், வெள்ளை பூக்களால் தொடுக்கப்பட்ட மாலை, வெள்ளை நிற மலர்கள், வெள்ளை நிற ரங்கோலி, வெள்ளை எள், அரிசி மற்றும் தேங்காயுடன் தயாரிக்கப்பட்ட 'நைவேத்தியம்' வழங்கி சிறப்பு பூஜை நடத்தப்படுகிறது.

பக்தர்கள் வெள்ளை நிறத்தில் உடை அணிந்து தேவிக்கு பூஜை செய் கிறார்கள். வெள்ளை நிற அல்லி சரஸ்வதி தேவிக்கு விருப்பமான மலர் என்று நம்பப்படுகிறது.

## புத்தகம் மற்றும் எழுது பொருட்கள்

மூன்று நாள் சரஸ்வதி பூஜையின் போது மாணவர்கள் மற்றும் குழந்தைகள் சரஸ்வதி தேவிக்கு முன்பு புத்தகங்கள், எழுதுபொருட்களை வைத்து வழிபடுகின்றனர். நவராத்திரியின் ஒன்பதாம் நாளான கடைசி நாளில் சரஸ்வதி தேவியின் ஆசீர்வாதத்துடன் பூஜைக்கு வைத்த பொருட்களை எடுத்து உபயோகிக்கின்றனர்.

**– யூகீதன்**

# உறவுகள் சங்கமிக்கும் தீபாவளி!

**உலகில் வாழும் அனைத்து இந்து மக்களாலும் வெகுவிமர்சையாக கொண்டாடப்படும் "தீபாவளி பண்டிகை, தீபாவளி பண்டிகை.**

பல நாடுகளில் தீபாவளி பண்டிகை கொண்டாடு வதற்காக விடுமுறை தினமாக இருக்கின்றது. அத்துடன் இந்த பண்டிகை குழந்தைகளால் அதிகம் விரும்பி கொண்டாடப்படுகிறது. பண்டிகைகள் நம் முன்னோர்களால் ஏற்படுத்தப் பட்ட நிகழ்வாகும். தனி மனித சமூகத்தின் நல்வாழ்வை கருதி மிகுந்த சிந்தனையுடன் முன்னோர்கள் பண்டிகைகளை ஏற்படுத்தியுள்ளனர். மனிதநேய ஒருமைப்பாட்டை தமது வாழ்க்கையில் கடைப்பிடித்து வாழ்வதற்கு பண்டிகைகள் துணைபுரிகின்றன. உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் மக்களால் பல்வேறுபட்ட பண்டிகைகள் கொண்டாடப்படுகின்றன. அவ்வகையில் தீபாவளிப் பண்டிகையும் ஒன்றாகும். இந்துக்கள் மட்டுமின்றி சீக்கியர்களும் சமணர்களும் கூட இப்பண்டிகையை வெவ்வேறு காரணங்களுக்காகக் கொண்டாடுகின்றனர். தீபாவளி பண்டிகை பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**தீபாவளி என்பதன் அர்த்தம்**

தீபாவளி என்பதன் பொருளை நோக்குவோமாயின் தீபம் ஆவளி என இரு





சொல் இணைந்ததே தீபாவளி ஆகும். தீபம் என்பது "விளக்கு என்றும் ஆவளி என்றால் "வரிசை என்றும் பொருள் அதாவது தீபங்களை வரிசையாக ஏற்றி ஒளிமயமாக இறைவனை வழிபடும் புண்ணிய தினமே தீபாவளியாகும். வாழ்வில் இருள் (தீமைகள்) அகன்று ஒளி (நன்மைகள்) வீசும் என்பது இந்துக்களின் நம்பிக்கை ஆகும்.



**தோற்றம்**

தீபாவளிப் பண்டிகையின் தோற்றம் பற்றி இந்துக்கள் மத்தியில் பல்வேறு ஐதீகங்கள் நிலவுகின்றன. அந்தவகையில் இராமன் 14 ஆண்டுகள் வனவாசம் முடித்து நாடு திரும்பும் போது மக்கள் விளக்கேற்றி வரவேற்றனர் இதனையே தீபாவளியாகக் கொண்டாடுவதாக கருதும் நிலை காணப்படுகின்றது. யமனை போற்றும் வகையில் தோன்றியதாகவும் கூறப்படுகின்றது. பவிச்சக்கரவர்த்தியைப் போற்றும் வகையில் தோன்றியது என்ற ஐதீகமும் உண்டு. நரகாசுரன் என்னும் பழைய மரபுக் கதையின் அடிப்படையில் தோன்றியது எனவும் கூறப்படுகின்றது. இதுவே பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

நரகாசுரன் கடும் தவத்தினால் பல ஆற்றல்களைப் பெற்றமையால் தானே கடவுளிலும் மேலானவன் என்ற மமதை ஏற்பட்டது. இதனால் தேவர்களையும் ரிஷிகளையும் கொடுமைப்படுத்தினான். இவனது கொடுமைகளைத் தாங்க முடியாமல் தேவர்களும் ரிஷிகளும் தம்மைக் காத்தருள வேண்டுமென மகாவிஷ்ணுவிடம் வேண்டினர். வேண்டுதலுக்கிணங்க மகாவிஷ்ணு கண்ணன் அவதாரம் எடுத்து அந்தி சாயும் நேரத்தில் சத்யபாமாவின் உதவியுடன் நரகாசுரனை சம்ஹாரம் செய்தார். இவ்வாறு வதம் செய்த நாளே இருள் நீங்கி ஒளி பெற்ற நாளாக எண்ணி தீபாவளியாகக் கொண்டாடப்படுகிறது.

**தீபாவளியின் சிறப்பு**

தீபாவளிப் பண்டிகையானது பல சிறப்புகளை பெற்றுள்ள பண்டிகையாகும். தீபாவளியன்று நீராடுவதை விசேடமாகக் சொல்லப்படுகின்றது. அதாவது "புனித நீராடல் என்று சொல்லப் படுகின்றது. நன்மையின் வெற்றி தீமையின் அழிவு என்பதனைத்தான் கிருஷ்ண பகவான் நரகாசுரன் அழிவின் மூலம் உலகத்திற்கு உணர்த்தியுள்ளார்.

தீபாவளியின் சிறப்புகளில் ஒன்றாக சிங்கப்பூரில் தீபாவளிப் பண்டிகையை சிறப்பித்து தபால் தலை வெளியிடப்பட்டுள்ளமையைக் கூறலாம். திருமணமான தம்பதியினர் திருமணத்திற்கு பின் வரும் முதல் தீபாவளியைத் தல தீபாவளி என்று சிறப்பாகக் கொண்டாடுகின்றனர்.

தீபாவளி அன்று அனைத்து நதிகள் ஏரிகள் குளங்கள் கிணறுகளிலும் நீர்நிலைகளிலும் கங்கா தேவி வியாபித்து இருப்பதாக ஐதீகம் உண்டு. இன் நாளில் எண்ணை தேய்த்து நீராடுபவர்கள் கங்கையில் நீராடிய புனிதத்தையும் திருமகளின் அருளையும் பெறுவர். தீபாவளித் திருநாளில் எல்லா உறவுகளும் ஒன்றிணைந்து மகிழ்கின்றனர். இதனால் பிரிந்த உறவுகள் இணைகின்றன. ஒளியினால் நிறைந்து அழகாக





காட்சியளிக்கும் இந்நாளின் மூலம் தீமைகள் நீங்குவதால் மன நிறைவு பெறுகின்றது. பண்டிகையானது தத்துவம் நிறைந்ததாகவும் ஒழுக்கவியல் கருத்துக்களை கொண்டதாகவும் உள்ளது. அவ்வகையில் இது வெறும் பண்டிகை மட்டுமல்லாது வாழ்வினைச் செம்மையாக்கும் அழகிய தீபத் திருநாளாகவும் அமைகின்றது.

**– மல்லிகா**

உ

SRJ "ராஜயோகம்" Dr.K.Ram Ph.D (USA)

# SRJ GEMS™ JEWELLERS

எங்கேயும் எப்போதும் SUCCESS

**நீங்கள் எந்த தேதியில், ராசியில், நட்ஷத்திரத்தில், லக்கினத்தில் பிறந்தவராக இருந்தாலும்... ஏன்? எந்த மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும்**

'நல்ல நேரமும்' நன்மையான காலமும்'ஜாதகத்தில் இருப்பது சத்தியமான உண்மை

உங்களுடைய ''ஜாதகம்'' ''கைரேகை'' ''பிறந்ததேதியை'' ஆய்வு செய்து பிரபஞ்சத்தில் உங்களுக்காக விதிக்கப்பட்டுள்ள ''யோக பலன்களையும்'' ''பாவ புண்ணியங்களையும்'' ''பரிகார நன்மைகளையும்'' உறுதியாக தெரிந்துகொண்டு ''எண்கணித சாஸ்திரம்'' ''வாஸ்து சாஸ்திரம்'' ''தெய்வ பிரசன்ன சாஸ்திரம்'' ''விருட்ஷ சாஸ்திரம்'' ''மச்ச சாஸ்திரம்'' ''மந்த்ர'' ''தந்த்ர' சாஸ்திரம் ''சாமுத்ரிகா சாஸ்திரம்'' ''பஞ்சபூத சாஸ்திரம்'' ''பரிகார சாஸ்திரம்'' ''அதிர்ஷ்டரத்தின சாஸ்திரம்'' மற்றும் ''அஸ்ட்ரோ பயோரித சாஸ்திர'' விதிகளின்படி

## ''திக்கற்ற யாவரும்'' ''ஒப்பற்ற பயன்பற''

## SRJ "ராஜயோகம்" Dr. K.ராம் Ph.D., (USA)

''அண்ட நிழலும் இல்லை'' ''ஆதரிப்பார் யாரும் இல்லை''
என்ற நிலையில் ஏக்கப்பட்டுக் கொண்டிருக்கும், மனித உள்ளங்களை ஊக்கப்படுத்தி உண்மையான வாழ்வியலில்
''அவமானப்பட்ட'' ஒவ்வொரு மனிதனுக்கும் வெகுமானம் உண்டு!
என்ற ஆன்மீக உண்மையை மதங்களைக் கடந்து உலக நாடுகளில் உறுதிப்படுத்தி,
''சர்வமத ஜோதிட மகிரிஷி'' என்று பாராட்டும் பெற்றதோடு,
சிங்கப்பூர், மலேசியா, ஸ்ரீலங்கா உட்பட ஆஸ்திரேலியாவில் ''சிட்னி முருகர் கோவில்'' மற்றும் ''ஏடிபிசி வானொலி''-யில் சிறப்பு ஆன்மீக நேரலை நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மன், சுவிட்சர்லாந்து, கனடா, இங்கிலாந்து (லண்டன்) உட்பட மேலை நாடுகளில் உள்ள நோய்களின் இக்கட்டான கேள்விகளுக்கு, அப்பட்டமான ஆன்மீக விளக்கங்கள் கொடுத்து, வெளிநாட்டு மக்களாலும், பத்திரிகைகளாலும், பாராட்டுப் பெற்றதோடு, ஜோதிடம், ஆன்மீகம் உள்ளிட்ட துறைகளில் சிறந்த சேவைக்காக ''மனிதருள் மாணிக்கம்'' ''மகாத்மா காந்தி'' ''சாதனைச் சிகரம்'' ஆகிய விருதுகளும் பாராட்டுக்களும் பெற்றதோடு ''சாணத்திற்கும்'' ''மெஞ்ஞானத்திற்கும்'' உள்ள தாத்பர்யங்களை ''விஞ்ஞானத்தோடு'' விளக்கப்படுத்தி, ஆளுநர் அவர்களால் ''ஆன்மீகச் செம்மல்'' விருது பெற்ற



## SRJ "ராஜயோகம்"
## Dr. K.ராம் Ph.D., (USA)

**அவர்களை நேரில் சந்திக்க முன்பதிவிற்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :**

SRJ "ராஜயோகம்" Dr.K.Ram Ph.D (USA)

# SRJ GEMS™ JEWELLERS

எங்கேயும் எப்போதும் SUCCESS

NO: 139, PANNA PLAZA, ARCOT ROAD, KODAMBAKKAM, CHENNAI - 600 024, TAMIL NADU, INDIA.

OFFICE : 044 - 24849187
MOBILE :
9940431377, 9677276129,
9952991118, 9840160068
EMAIL : srjgem@gmail.com
WEB : www.srjgemsastronumero.com, www.drkramsrj.com.

**SINGAPORE / MALAYSIA :**
No: 250, BRICK FIELDS,
LITTLE INDIA ,
KUALA LUMPUR - 50470.
MOBILE : +91 9952991118

**SRILANKA :**
NO: 81, 1/5 MAHA,
VIDIYALAYA MAWATHA,
COLOMBO - 13.
OFFICE : +94112448303
MOBILE : +94772254163
+91 9952991118

**AUSTRALIA :**
NO: 65, HOMEBUSH ROAD,
STRATHFIELD SYDNEY,
AUSTRALIA - 2135.
MOBILE : +91 9952991118

**LONDON :**
NO: 163, STAINES ROAD,
MIDDLE SEX TWS 3JZ,
UNITED KINGDOM.
MOBILE : +91 9952991118


உங்கள்
ஆதித்யா
TV யில்
★ 27 நட்சத்திரங்களை உள்ளடக்கிய 12 ராசிகளில் உங்கள் ராசிக்கான தின பலன்
★ வழிபட வேண்டிய தெய்வம்
★ ஆன்மீக தகவல்
யோகம் ராஜயோகம் நிகழ்ச்சியில்
தினந்தோறும் காலை 7.00 மணிக்கு காணத்தவறாதீர்கள்

# ராஜயோகம்
# ஆன்மீக அறக்கட்டளை...!

(GOVT REGD : 58/99 - 22 23)



கல்வி, மருத்துவம்,
கலாச்சரம், பண்பாடு,
உணவு, விளையாட்டு,
ஒழுக்கம் சார்ந்த
உதவிகள் மற்றும்
இந்துமத சாஸ்திர,
சம்பிரதாய ஆன்மீக
விழிப்புணர்வு
வழங்குதல்.

**உதவும் உள்ளங்கள்
தொடர்பு கொள்ள
814 814 88 44 /
814 814 82 92
website:
www.rajayogamtrust.com**

# ராஜயோகம் நிகழ்ச்சிகள்









# குலதெய்வ விருட்ஷம்

ஒன்பது கிரகங்கள், 12 ராசிகள்,
12 லக்கினங்கள், 15 திதிகள்,
27 நட்ஷத்திரங்கள், 27 பட்ஷிகள்,
27 விருட்ஷங்களுக்கான
சூட்சுமக் குறியிடுகளோடு
தெய்வப்பிரசன்ன
சாஸ்திரப்படி உருவாக்கப்பட்ட
"குலதெய்வ விருட்ஷம் "



"ராஜயோகம்"
Dr. K.ராம் Ph.D., (USA)



*( height : 15 cms*
*width : 17 cms*
*weight : 489g )*

குடும்ப ஒற்றுமை,
குபேர சம்பத்து,
காரிய வெற்றி, சத்ரு ஜெயம்,
நோய், கடன்,
திருமண தடைகள் விலகி,
பதினாறு செல்வங்கள்
கிடைப்பதற்க்காக
48 வகையான பூஜைகளால்
பூஜிக்கப்பட்ட ...

# "குலதெய்வ விருட்ஷம்"

## இது பொருள் அல்ல
## "குலதெய்வ அருள்"

**Order Now**
**99404 31377 / 99529 91118**
**website: www.kuladeivavirutcham.com**

நல்லெண்ணெயில் மகாலட்சுமி வாசம் செய்கிறார். அதே போல், நீரில் கங்காதேவியும் எழுந்தருளியுள்ளார் என்பதும் இந்துக்களின் நம்பிக்கை.

தீபாவளிக்கு உடலில் நல்லெண்ணெய் தேய்த்து குளிக்க வேண்டும் என்பது சாஸ்திரம். அந்த வகையில், இக்குளியலை சூரிய உதயத்துக்கு முன்னதாக எவரும் செய்யக்கூடாது என்பது சாஸ்திர நியதி. ஆனால் தீபாவளி தினத்தில் சூரிய உதயத்துக்கு முன்னரும் உடலில் நல்லெண்ணெய் தேய்த்து குளிக்கலாம். ஏனெனில் நரகாசுரனை மக்கள் நினைக்க வேண்டும் என பூமாதேவி ஸ்ரீ கிருஷ்ணரிடம் வேண்டினாள். இந்த வரத்தை ஸ்ரீ கிருஷ்ணரும் அருளினாள். ஆகையால்,நல்லெண்ணெயில் உடலில் தேய்த்து குளிக்கிறோம். காரணம், நல்லெண் ணெயில் மகாலட்சுமி வாசம் செய்கிறார். அதேபோல், நீரில் கங்கா தேவியும் எழுந்தரு ளியுள்ளார் என்பதும் இந்துக்களின் நம்பிக்கை. எனவேதான் தீபாவளி நாளில் எண்ணெய் தேய்த்து குளிப்பதை கங்கா ஸ்நானம் என்கின்றனர் நம் முன்னோர். முன்னதாக, அதிகாலை யிலேயே எழுந்து வாணலியில் நல்லெண்ணெய் ஊற்றி கொஞ்சம் மிளகு, சீரகம், வெள்ளைப்பூண்டு தோலுடன் சேர்த்து காய்ப்பார்கள். இதனை உடம்பில் பூசிக்கொண்டு ஒரு அரைமணி நேரம் கழித்து குளிக்க வேண்டும். தொடர்ந்து தலைக்கு சிகைக்காய் பயன்படுத்துவது உத்தமம். மேலும், அருணோதய காலம் என்பது சூரியன் உதயத்துக்கு 48 நிமிடம் முன்புவரை உள்ள காலம் ஆகும். அந்த வகையில், காலை 6 மணிக்கு சூரிய உதயம் என்றால், 5.15 மணிக்கு நீராட வேண்டும்.



**தீபாவளிக்கு உடலில் நல்லெண்ணெய் தேய்த்து குளிக்க வேண்டும் என்பது சாஸ்திரம். அந்த வகையில், இக்குளியலை சூரிய உதயத்துக்கு முன்னதாக எவரும் செய்யக்கூடாது என்பது சாஸ்திர நியதி.**

இந்த ஆண்டு தீபாவளியில் அதிகாலை 4.30 மணியில் இருந்து 5.30 மணிக்குள் எண்ணெய் தேய்த்து குளிப்பது மிகவும் நல்லது. தலை தீபாவளி கொண்டாடும் புதுமண தம்பதிகள் நாயுருவியை தலையை சுற்றி போட்டுவிட்டு பின்னர் குளித்து பெற்றோர், மாமனார்மாமியார் உள்ளிட்ட பெரியவர்களிடம் ஆசிர்வாதம் பெறுவது நல்லது.

–சிவா



# அக்டோபர் 2025 - ராசி

## மேஷம்



**அதிகாரத்தோடும் சுறுசுறுப்போடும், அதிக நேரம் செயல்படக் கூடிய வல்லமை உள்ள மேஷ ராசி பாக்கியவான்களுக்கு நவகிரக அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாக கிடைத்திட வாழ்த்துக்கள்!**

குடும்பத்தில் மகிழ்ச்சியும் உற்சாகமும் நிலவும். பணவரவு எதிர்பார்த்ததை விட அதிகமாக இருக்கும். ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். அடுத்தடுத்த சுபநிகழ்ச் சிகளால் வீடு களைகட்டும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். மாத முற்பகுதியில் கணவன் ரு மனைவிக் கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும் என்றாலும் பிற்பகுதியில் சிறு சிறு கருத்துவேறுபாடுகள் ஏற்பட்டு நீங்கும். குடும்பத்திலும் குழப்பமான சூழ்நிலை காணப்படும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் வெற்றியடையும். வெளிவட்டாரத்தில் உங்கள் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும். பொது நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்துவீர்கள். தந்தை வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தந்தையுடன் இருந்து வந்த கருத்துவேறுபாடு மறையும். வழக்குகளில் இருந்து வந்த பிற்போக்கான நிலை மாறி, சாதகமான திருப்பம் ஏற்படும்..

**அனுகூலம் தரும் தேதி ; 1,3,6,8,10,13,17**

## ரிஷபம்



**முறையான வாழ்க்கையை சரியாக வாழ்ந்து வகையான செல்வத்தை வாழ்க்கையில் சேர்த்திடும் திறமைபடைத்த ரிஷப ராசி பாக்கியவான்களுக்கு நவகிரக அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாக கிடைத்திட வாழ்த்துக்கள்!**

மாதம் முழுவதும் நீங்கள் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டியது அவசியம். தந்தையுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டு நீங்கும். பூர்வீகச் சொத்துகள் தொடர்பான பிரச்னைகளில் அவசர முடிவு எடுக்கவேண்டாம். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். சகோதர வகையில் சில பிரச்னைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது. குடும்பத் தில் சுபநிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான வாய்ப்புகள் கனிந்து வரும். மாதப் பிற்பகுதியில் வாகன வகையில் பழுதுபார்ப்பு செலவுகள் அதிகரிக்கும். உறவினர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. வெளியூர்ப் பயணங்களின்போது கைப் பொருள்களைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளவும். நண்பர்களிடம் எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். சிலருக்கு நீண்டநாள்களாகச் செலுத்த நினைத்த தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**அனுகூலம் தரும் தேதி ; 1,3,5,8,11,14,17**

## மிதுனம்



**புதன் பகவானின் ஆதிக்கத்தால் எழுத்தாற்றலும், பேச்சாற்றலும் கூடுதலாக அமையப்பெற்ற மிதுன ராசி பாக்கியவான்களுக்கு நவகிரக அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாக கிடைத்திட வாழ்த்துக்கள்!**

தெய்வ அனுகிரகம் பரிபூரணமாகக் கிடைக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். தெய்வப் பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். பெரியோர்களின் அனுசரணையான போக்கு மகிழ்ச்சி தரும். மாத முற்பகுதியில் சுபநிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான வாய்ப்பு பிரகாசமாக உள்ளது. வெளிவட்டாரத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். நண்பர்களால் காரிய அனுகூலம் உண்டாகும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. தந்தையுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக் கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். சிலருக்கு உடல் ஆரோக்கியம் சிறிதளவு பாதிக்கக்கூடும் என்றாலும் உடனே நிவாரணம் கிடைத்துவிடும். கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடுகள் நீங்கும். மாத முற்பகுதியில் சகோதர வகையில் அனுகூலப் பலன்கள் ஏற்பட்டாலும், மாதப் பிற்பகுதியில் அவர்களால் சில பிரச்னைகளும் ஏற்படக்கூடும். வாழ்க்கைத் துணைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும்.

**அனுகூலம் தரும் தேதி ; 4,6,9,11,13,16.**

**ஓம் துவாரகை மன்னனே போற்றி, ஓம் தேவகி செல்வனே போற்றி, ஓம் நந்த கோபாலனே போற்றி**

## கடகம்



**இரவுநேர சிந்தனைகளாலும், செயல்பாடுகளாலும் சிறப்புகள் அதிகம் அமையப்பெற்ற கடக ராசி பாக்கியவான்களுக்கு நவகிரக அனு கிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாக கிடைத்திட வாழ்த்துக்கள்!**

முயற்சிகளில் வெற்றி உண்டாகும். திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே முடியும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். வெளிவட்டாரத்தில் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். சுபநிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். உங்களைத் தவறாகப் புரிந்துகொண்டு விலகிச் சென்ற உறவினர்கள் தங்கள் தவற்றை உணர்ந்து வலிய வந்து பேசுவார்கள். புதிய நண்பர்களின் அறிமுகமும் அவர்களால் ஆதாயமும் ஏற்படக்கூடும். பணப்புழக்கம் அதிகரிக்கும். தந்தையுடன் ஏற்பட்டிருந்த கருத்து வேறுபாடு மறையும். தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். கணவன் மனைவிக்கிடையே சிறு அளவில் கருத்துவேறுபாடு ஏற்பட்டாலும், உடனே சரியாகிவிடும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி தரும் செய்தி ஒன்று கிடைக்கும். சகோதரர்களால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். எதிரிகளால் ஏற்பட்ட பிரச்னைகளை முறியடிப்பீர்கள்.

**அனுகூலம் தரும் தேதி ; 1,6,7,9,11,14,16**

## சிம்மம்



**கலவரமான சூழ்நிலைகளில் கூட கௌரவமாக வாழத் தெரிந்து வைத்திருக்கும் சிம்ம ராசி பாக்கியவா ன்களுக்கு நவகிரக அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாக கிடைத்திட வாழ்த்துக்கள்!**

புதிய முயற்சிகள் சற்று இழுபறிக்குப் பிறகே சாதகமாக முடியும். மன உறுதி அதிகரிக்கும். துணிச்சலாக சில முடிவுகளை எடுப்பீர்கள். உறவினர்களுடன் பேசும்போது கூடுமானவரை பதற்றப்படாமல் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. புதிய வீடு அல்லது மனை வாங்கக் கூடிய வாய்ப்பு கூடிவரும். கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்து வேறுபாடு மறைந்து அந்நியோன்யம் அதிகரிக்கும். வேலையின் காரணமாகப் பிரிந்திருந்த கணவன் மனைவி ஒன்று சேரும் வாய்ப்பு ஏற்படும். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும். வெளிவட்டாரத்தில் மதிப்பு மரியாதை அதிகரிக்கும். குடும்பத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும். மாதப் பிற்பகுதியில் உறவினர்களால் குடும்பத்தில் சிறுசிறு பிரச்னைகள் ஏற்படக்கூடும் என்பதால் கவனமாக இருக்கவும். தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிள்ளைகள் வழியில் வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.

**அனுகூலம் தரும் தேதி : 3,9,11,13,16**

## கன்னி



**பல விஷயங்களில் சிக்கனமாகவும், குடும்ப விஷயங்களில் தாராளமாகவும் உள்ள கன்னி ராசி பாக்கியவான்களுக்கு நவகிரக அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாக கிடைத்திட வாழ்த்துக்கள்**

புதிய முயற்சிகள் வெற்றிகரமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பணவரவு அதிகரிக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த விஷயம் சாதகமாக முடியும். வெளிவட்டாரத்தில் மதிப்பு மரியாதை கூடும். இடையூறுகள் ஏற்பட்டாலும், சாமர்த்தியமாக முறியடித்துவிடுவீர்கள். மாத முற்பகுதியில் உறவினர்கள் மற்றும் மூன்றாவது நபர்களின் தலையீடு காரணமாகக் குடும் பத்தில் பிரச்னைகள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம். கணவன் மனைவிக்கிடையே சிலர் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சி செய்வார்கள். எனவே, ஒரு வரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. உறவினர்கள் வருகையால் செலவுகள் அதிகரிக் கும். அவர்களுடன் கருத்துவேறுபாடுகளும் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். வழக்குகளில் அவசரம் காட்டவேண்டாம். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவைப் படும். இளைய சகோதரர்களால் செலவுகள் ஏற்படும்.

**அனுகூலம் தரும் தேதி 1,3,5,9,11,13,16**

ஓம் நந்தகோபன் குமரனே போற்றி, ஓம் நப்பின்னை மணாளனே போற்றி, ஓம் நவநீத சோரனே போற்றி

# அக்டோபர் 2025 - ராசி பலன்கள்



## துலாம்

**எளிதில் உணர்ச்சி வசப்படக்கூடிய தன்மை இயல்பாகவே அமையப்பெற்ற துலாம் ராசி பாக்கியவான்களுக்கு நவகிரஹ அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாகக் கிடைத்திட வாழ்த்துக்கள்!**

குடும்பத்தில் மகிழ்ச்சியும் உற்சாகமும் அதிகரிக்கும். சுபநிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கி மகிழ்வீர்கள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். குடும்பத்துடன் உறவினர், நண்பர்கள் வீட்டு விருந்து விசேஷங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். மாதப் பிற்பகுதியில் உறவினர்கள் வருகை குடும்பத்தில் மகிழ்ச்சி தருவதாக இருக்கும். இதுவரை மறைந்திருந்த உங்கள் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். வெளிவட்டாரத்தில் மதிப்பு மரியாதை அதிகரிக்கும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களால் பணவரவுக்கும் சொத்துச் சேர்க்கைக் கும் வாய்ப்பு உண்டு. குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றி மகிழ்வீர்கள்.

**அனுகூலம் தரும் தேதி ; 1,4,7,9,13,17**

## விருச்சிகம்



**அரும்பும் எதிர்ப்புகளை அடியோடு தகர்த்தெறிந்து ஆனந்தமாய் வாழத் தெரிந்த விருச்சிகம் ராசி பாக்கியவான்களுக்கு நவகிரக அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாக கிடைத்திட வாழ்த்துக்கள்**

புதிய ஆடை, ஆபரணங்கள் சேரும். விருந்து விசேஷங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்பு உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிப்பும் மரியாதையும் கூடும். அரசாங்க விவகாரங்கள் அனுகூலமாக முடியும். தாய்மாமன் வகையில் எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும். வாழ்க்கைத்துணை மூலம் எதிர்பாராத பொருள்வரவுக்கு வாய்ப்பு உண்டு. பழைய வாகனத்தை மாற்றி, புதிய வாகனம் வாங்குவீர்கள். மறைமுக எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி நிலவும். உடல் ஆரோக்கியம் மேம்படும். வீண் செலவுகள் ஏற்படாது. குடும்பத்தில் சில பிரச்னைகள் ஏற்பட்டாலும் அதனால் பாதிப்பு எதுவும் ஏற்படாது. மாதப் பிற்பகுதியில் தாய்மாமன் வழியில் குடும்பத்தில் சில குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். உறவினர்களிடம் அனுசரணையாகச் செல்வது நல்லது. பிள்ளைகளை அவர்கள் போக்கிலேயே விட்டுப் பிடிக்கவும். எந்த ஒரு செயலையும் ஒருமுறைக்குப் பலமுறை போராடித்தான் முடிக்கவேண்டி இருக்கும்.

**அனுகூலம் தரும் தேதி : 1, 2, 8**



## தனுசு

**சாதாரண சூழ்நிலைகளையும் தோதாகப் பயன்படுத்தி சந்தோஷ நிலைகளை வளர்த்துக் கொள்ளும் தனுசு ராசி பாக்கியவான்களுக்கு நவகிரஹ, அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாகக் கிடைத்திட வாழ்த்துக்கள்**

அனைத்து காரியங்களிலும் வெற்றி உண்டாகும். பணவரவு மகிழ்ச்சி தருவதாக இருக்கும். புதிய வாகனம் வாங்கும் யோகமும் உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகளும் ஏற்படக்கூடும். தெய்வ பக்தியும் ஆன்மிகத்தில் நாட்டமும் அதிகரிக்கும். தந்தை வழியில் எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்படும். தந்தையுடன் கருத்து வேறுபாடு ஏற்படக் கூடும் என்பதால் பொறுமையுடன் இருப்பது நல்லது. அரசாங்கக் காரியங்கள் இழுபறியாகி முடியும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பொன், பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டாகும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் எதிர்பாராத ஆதாயம் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும். வீடு, மனை வாங்கும் முயற்சி அனுகூலமாக முடியும். ஆனால், உறவினர்களால் அடிக்கடி பிரச்னைகள் ஏற்படக்கூடும் என்பதால் கூடுமானவரை பொறுமையைக் கடைப்பிடிக்கவும். கணவன் மனைவிக்கிடையே சிறு அளவில் கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளதால், ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. நண்பர்களிடம் எதிர்பார்க்கும் உதவிகள் கிடைக்கும். நண்பர்களால் வாழ்க்கையில் நல்ல திருப்பம் ஏற்படக்கூடும்.

**அனுகூலம் தரும் தேதி 2,3,7,9,11,15,17**

ஓம் நான்மறை பிரியனே போற்றி, ஓம் நாராயண மூர்த்தியே போற்றி, ஓம் பரந்தாமனே போற்றி

## மகரம்



**நிலையில்லாத காலங்களில்கூட வளமான மனோநிலை அமையப்பெற்ற மகர ராசி பாக்கியவான்களுக்கு நவகிரஹ அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாகக் கிடைத்திட வாழ்த்துக்கள்!**

பணவரவு கணிசமாக உயரும். புதிய ஆடை, ஆபரணங்கள் சேரும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதையும் சாதிக்கவேண்டும் என்ற மன உறுதி ஏற்படும். புதிய வாகனம் வாங்கும் யோக மும் சிலருக்கு ஏற்படும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்பத் தில் மகிழ்ச்சியும் நிம்மதியும் ஏற்படும்.

பிரிந்திருந்த தம்பதி ஒன்று சேருவார்கள். சிலருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும். சுபநிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். குடும்பத்துடன் விருந்து விசேஷங்களுக்குச் சென்று வருவீர்கள். உறவினர்களால் உதவி கிடைக்கும் அதே நேரத்தில் அவர்களால் சிறு உபத்திரவமும் ஏற்படலாம். உறவினர்கள் வகையில் சற்று பக்குவமாக நடந்துகொள்வது நல்லது. வெளிவட்டாரத்தில் மதிப்பு மரியாதை கூடும். வாழ்க்கைத்துணை வழி உறவுகள் உங்கள் ஆலோசனைகளை ஏற்றுக் கொள்வார்கள். அவர்கள் மத்தியில் உங்கள் கௌரவம் உயரும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**அனுகூலம் தரும் தேதி : 3,7,11,13,15**

## கும்பம்



குழந்தைத்தனமான சுபாவத்தால் கோபம் வந்தால்கூட கட்டுப்படுத்தத் தெரியாத கும்ப ராசி பாக்கியவான்களுக்கு நவகிரஹ அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாகக் கிடைத்திட வாழ்த்துக்கள்!

வெளிவட்டாரத்தில் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியங்கள் முடிவதில் சில தடைகள் ஏற்பட்டு நீங்கும். தந்தை வழி உறவுகளால் வீண் விரயம் உண்டாகும். ஆனாலும், பணவரவு கணிசமாக உயரும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் உற்சாகமும் நிலவும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உறவினர்கள் வருகையும், அதனால் மகிழ்ச்சியும் உண்டாகும். உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாகும். வீடு, மனை வாங்கும் முயற்சியில் தற்போது ஈடுபடவேண்டாம். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். எதிரிகளின் தொல்லை இல்லாமல் போகும். அவர்களால் மறைமுக ஆதாயமும் கிடைக்கக்கூடும். முக்கிய முடிவுகளைத் துணிச்சலுடன் எடுப்பீர்கள். உங்கள் முயற்சிகளுக்கு மனைவி, மகள் உள்ளிட்ட குடும்பப் பெண்கள் பக்கபலமாக இருப்பார்கள். ஆனால், மாதப் பிற்பகுதியில் விலை உயர்ந்த நகை மற்றும் பொருள்களை இரவல் தரவும் வாங்கவும் வேண்டாம். வீட்டில் பொருள்கள் களவு போகக்கூடும் என்பதால், எச்சரிக்கையாக இருக்கவும். அக்கம் பக்கத்தில் இருப்பவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. உடல் ஆரோக்கியம் மேம்படும்.

அனுகூலம் தரும் தேதி ; 3,6,8,11,15,17

## மீனம்



**கபண்பட்ட அனுபவமும் மன்னிக்கும் மனோநிலையும் ஒருங்கே அமையப்பெற்ற மீன ராசி பாக்கியவான்களுக்கு நவகிரஹ அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாகக் கிடைத்திட வாழ்த்துக்கள்!**

பண வரவு திருப்தி தருவதாக இருக்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும். குடும்பத்தில் வசதி வாய்ப்புகள் பெருகும். வீட்டில் மகிழ்ச்சியும் நிம்மதியும் உண்டாகும். பெண்களால் நன்மை உண் டாகும். புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நி யோன்யம் அதிகரிக்கும். மாத முற்பகுதியில் சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். உறவினர்களால் நன்மைகள் ஏற்படும். குடும்பத் தேவைகள் ஒவ்வொன்றாக நிறைவேறும். தந்தை வழியில் எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். பெண்களால் நன்மை உண்டாகும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். பூர்வீகச் சொத்துப் பிரச்னையில் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். சிலருக்கு தடைப்பட்ட திருமணம் கூடி வரும். வீட்டில் சுபநிகழ்ச்சிகள் ஏற்பாடாகும். குடும்பத்துடன் கோயில்களுக்குச் சென்று பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். வெளியூர்ப் பயணங்களின்போது கைப்பொருள்களை பத்திரமாகப் பார்த்துக்கொள்ளவும்.

**அனுகூலம் தரும் தேதி ; 52,6,9,11,15,17**

ஓம் பக்த வத்சலனே போற்றி, ஓம் பலராமர் சோதரனே போற்றி, ஓம் பவள வாயனே போற்றி, ஓம் பத்ம நாபனே போற்றி

# தீபாவளியும் அன்னபூரணி விரதமும்!

**தீபாவளியன்று லட்சுமி பூஜை செய்வது போன்று அன்னபூரணிக்கும் விரதமிருந்து பூஜை செய்திட அள்ள அள்ள குறையாத செல்வங்களையும், அன்னத்தையும், ஞானத்தையும், அன்னபூரணி வழங்குவாள் என ஞான நூல்கள் கூறுகின்றன.**


*அனைத்து ஜீவராசிகளும் பசிப்பிணியின்றி வாழ அருள்புரிபவள் அன்ன பூரணி. அகில உலகிற்கும் படி அளப்பவள் அன்ன பூரணி. அவளை வணங்கினால் தான் நம் வாழ்நாளில் பசிப்பிணியின்றிவாழ முடியும். நமக்கு எந்த வகை உணவும் வயிற்றுக்கு சென்று பசியாற்றுகிறது என்றால் அதனை தருபவளே அன்ன பூரணி. அன்ன பூரணியை குறிப் பிட்ட நாளில் தான் வணங்க வேண்டும் என்பதில்லை.*



தினம் தினம் நாம் உணவு உண்ணும்போதும் அன்னபூரணியே நமஹ என்று கூறி உணவருந்தினாலே அவள் நமக்கு வயிற்றுக்கு வஞ்சனை செய்யாமல் பசிக்கும்போது தேவையான உணவை தந்து விடுவாள். உணவாய் உண்ணும் எல்லா பொருள்களை விளைவிப்பதும், அதனை உயிர்ப்பிக்க ஆதாரமாய் இருப்பதும் அன்னபூரணியே.

அந்த அன்னபூரணியை தீபாவளி நாளன்றும் அதன்முன், பின் ஆகிய மூன்று நாட்கள் காசியில் தங்கமயமாய் காட்சி தருபவளை வணங்கிட வாழ்நாள் முழுவதற்குமான அன்னத்தை, செல்வத்தை வழங்கிவிடுவாள். காசியில் அன்னபூரணி அள்ள அள்ள குறையாத அட்சயபாத்திரத்தில் பால் அன்னம் தந்து உலக உயிர்களின் அன்னதோஷம் என்னும் வறுமை அண்டாதவாறு அருள்புரிகிறாள்.

செல்வ வளங்களை பெற தீபாவளியன்று லட்சுமி பூஜை செய்வது போன்று அன்னபூரணிக்கும் விரதமிருந்து பூஜை செய்திட அள்ள அள்ள குறையாத செல்வங்களையும், அன்னத்தையும், ஞானத்தையும், அன்னபூரணி வழங்குவாள் என ஞான நூல்கள் கூறுகின்றன.



சிவபெருமானின் ஐந்து தலைகள் போல் தனக்கும் ஐந்து தலைகள் உள்ளது என பிரம்மதேவன் கர்வம் கொண்டார். அதனை தீர்க்க முற்பட்ட சிவன் தன் மனைவி பார்வதிதேவியை வைத்து ஓர் லீலை புரிந்தார். அதன்படி கயிலைக்கு வந்த பிரம்மனை பார்த்து பார்வதிதேவி சிவபெருமான் என நினைத்து வணங்கிட அதனை கண்டு பிரம்மன் கர்வம் கொண்டு சிரித்து விட்டான். இதனை கண்ட சிவன் பிரம்மனின் ஐந்து தலைகளில் ஒன்றை கொய்து விட்டார்.

பிரம்மன் தலை துண்டித்த தோஷத்தால் சிவன் கையிலேயே அந்த கபாலம் ஒட்டி கொண்டது. இந்த தோஷம் போக்க சிவபெருமான் பல இடங்களில் பிச்சை பெற்றார். ஆயினும் சிவன் கையை விட்டு கபாலம் விழவில்லை. அதே நேரம் பிரம்மதேவனை பார்த்து சிவனார் என நினைத்து வணங்கியதற்கு தனக்கு தானே தண்டித்து கொண்டு காசியில் அன்னபூரணியாக அவதரித்து தவம் செய்தாள். இச்சமயம் பிட்சாடனாராக வந்த சிவபெருமான் அன்னபூரணியிடம் பிச்சை பெற்றார்.

அந்த நேரமே பிரம்ம கபாலம் சிவபெருமான் கையை விட்டு விலகியது. சிவனின் பசியை தீர்க்க வந்த அன்னபூரணி உலக பசிப்பிணி தீர்க்க காசியிலேயே தங்கி விட்டாள். உணவை அருளும் சக்தி அன்னபூரணி அன்னை சக்தியும், ஈசனும் ஒரு சொக்கட்டான் விளையாட அதில் ஈசன் வெற்றி பெற்றார். ஆனால் சக்தியோ சிவன் ஏதோ தவறாக ஆடியே தன்னை வெற்றி கொண்டார் என எண்ணி வாதம் செய்தார். ஈசனோ “எல்லாம் மாயை. இதில் இந்த ஆட்டமும் மாயை” என்று கூறி, எனவே வெற்றி, தோல்வி குறித்து அதிக கலக்கம் கொள்ள வேண்டாம் என்று கூறினார். தேவியோ எல்லாம் மாயை எனில் உயிர்களின் இயக்கமும் மாயையா? என வினவ, ஆமாம் என்றார் சிவபெருமாள்.

அதன் காரணமாய் சக்தி தேவி காசி நகரில் வந்து தவமியற்றினாள். தன் பணியை விட்டு பராசக்தி தவமியற்றியதால் உலகத்தில் உயிர்கள் பசியால் வாடின. உலக மக்களின் துயரம் போக்க ஈசன் தாமே காசிக்கு பிச்சாடனார் ஆக சென்று பிச்சை எடுத்து பசியாறினார். அப்போதுதான் சிவபெருமான் “உலகம் மாயைதான். எனினும் உயிர்கள் வாழ ஆதார சக்தி உணவு தேவை. அதனை அருள்பவள் சக்தியே” என்று தன் தவறை உணர்ந்து கூறினார். அது முதல் காசியில் அமர்ந்து அன்னகூடம் அமைத்து சகல ஜீவராசிகளின் பசிப்பிணி போக்குகிறாள் அன்னதயாபரி.

நவரத்ன சிம்மாசனத்தில் சம்மணமிட்டு அமர்ந் திருக்கும் அன்னையின் ஒரு கரத்தில் அட்சய பாத்திரமும், மறு கரத்தில் தங்க கரண்டியுடன் கூடிய தங்கத்தில் ஜொலிக்கும் அன்னபூரணியை தீபாவளியின்போது மூன்று நாட்களுக்கு மட்டுமே தரிசிக்க முடியும். அன்னையிடம் பிச்சை கேட்கும் பிட்சாடனார் உருவமும் அருகில் ஆரடி உயரத்தில் உள்ளது. இந்த சிலை வெள்ளியால் செய்யப்பட்டது. தீபாவளி யன்று அன்ன கூடம் என்ற நிகழ்வில் பலவித உணவுகள், பலகாரங்கள் வைத்து பூஜை செய்து அனைவருக்கும் பிரசாதமாக வழங்கப்படும். மறுநாள் லட்டு தேரில் அன்னபூரணி ஊர்வலம் வருவாள். எண்ணற்ற லட்டுகளால் உருவான தேர் திரும்ப வரும்போது ஒரு லட்டு கூட இருக்காது. அன்னபூரணியை தீபாவளியன்று தொடர்ந்து மூன்று நாட்கள் விரதமிருந்து பூஜை செய்து வணங்கலாம். அதுபோல் அன்னபூரணி உருவச்சிலை வைத்து பூஜை செய்து வணங்கிடலாம். அன்னபூரணி அனைத்து நலன்களையும் தருவாள்.

-பழனி

# தீபாவளி ஏன் கொண்டாடப்படுகிறது


பதினான்கு ஆண்டுகள் வனவாசத்தை முடித்த இராமன், இராவணனை வதம் செய்து மனைவி சீதை மற்றும் தம்பி லட்சுமணனுடன் அயோத்திக்கு திரும்பிய நாளை தீபாவளி பண்டிகையாக நாடு முழுவதும் கொண்டாடுகின்றனர். தீபாவளி கொண்டாட வேறு பல காரணங்களும் சொல்லப்படுகின்றன. நரகாசுரனை கண்ணன் வதம் செய்த நாளாகவும் தீபாவளி கொண்டாடப்படுகிறது. அதிகாலை எழுந்து தலையில் நல்லெண்ணெய் தேய்த்து குளித்து, வீடு முழுவதும் தீபங்கள் ஏற்றி, பட்டாசுகள் வெடித்து தீபாவளி பண்டிகை கொண்டாடப்படுகிறது.

தீபாவளி என்பது சமஸ்கிருத சொல்லாகும். சமஸ்கிருதத்தில் 'தீபம்' என்றால் விளக்கு, 'ஆவளி' என்றால் வரிசை என பொருட்படும். எனவே, தீபாவளி என்பது வரிசையாக விளக்குகள் ஏற்றி வைத்து கொண்டாடும் பண்டிகையாகும். வாழ்வில் இருளைப் போக்கி ஒளிமய மாக்குவதே தீபாவளியன்று விளக்குகள் ஏற்றி வைக்கக் காரணமாகும். உயிர்களின் மூலமான சூரியனின் ஆற்றலை பிரதிபலிக்கும் விதத்தில் விளக்குகள் ஏற்றி வைக்கப் படுவதாக ஸ்கந்த புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஸ்கந்த புராணத்தின் படி, சக்தியை சிவபெருமான் தமது சரிபாதியாகக் கொண்டு அர்த்தநாரீஸ்வரர் அவதாரம் எடுத்ததை போற்றும் விதமாக தீபாவளி கொண்டாடப்படுகிறது.

வட இந்தியாவில் ஹிந்து புத்தாண்டாக தீபாவளி கொண்டாடப்படுகிறது. தீபாவளி மகாலட்சுமிக்கு







**இந்தியா தவிர இந்திய வம்சாவளியினர் வாழும் நாடுகள், முற்காலத்தில் இந்திய மன்னர்கள் ஆட்சி செய்த நாடுகள் ஆகியவற்றிலும் தீபாவளி பண்டிகை கொண்டாடப்படுகிறது.**

பிரசித்தி பெற்ற தினமாகும். சுத்தமான வீட்டிற்குள் லட்சுமி வருவாள் என்ற நம்பிக்கையால் தீபாவளிக்கு முன்னதாக வீடுகளை சுத்தம் செய்து செல்வத்தை வழங்கும் மகாலட்சுமியை வரவேற்கிறோம். வணிகர்கள் இந்நாளில் விநாயகரை வணங்கி புதுக்கணக்கு தொடங்குவர். ஒடிசா மாநிலத்தில் தீபாவளியன்று இறந்த முன்னோர்களை வழிபடும் பழக்கம் உள்ளது. மேற்கு வங்கத்தில் தீபாவளி முன்னிட்டு காளி பூஜை நடத்தப்படும்.

இந்தியா தவிர இந்திய வம்சாவளியினர் வாழும் நாடுகள், முற்காலத்தில் இந்திய மன்னர்கள் ஆட்சி செய்த நாடுகள் ஆகியவற்றிலும் தீபாவளி பண்டிகை கொண்டாடப்படுகிறது. அந்த வகையில், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், கனடா, ஐக்கிய அரபு அமீரகம், இங்கிலாந்து, அமெரிக்கா, இந்தோனேசியா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, மொரீஷியஸ், தென் ஆப்பிரிக்கா, தாய்லாந்து, மியான்மர், கயானா, மேற்கிந்தியத்தீவுகள், பிஜி உள்ளிட்ட நாடுகளிலும் தீபாவளி பண்டிகை கொண்டாடப்படுகிறது.

இந்துக்களை தவிற பிற மதத்தவரும் வெவ்வேறு காரணங்களுக்காக தீபாவளி பண்டிகை கொண்டாடுகின்றனர். சமண மதக் கடவுள் மகாவீரர் இந்த நாளில் தான் நிர்வாணம் எனப்படும் மோட்சத்தை அடைந்ததாக நம்பப்படுகிறது. இதனால் மகாவீரரின் நினைவாக சமணர்கள் தீபாவளி பண்டிகை கொண்டாடுகின்றனர். இதே போல, சீக்கியர்களும் திபாவளி பண்டிகையை 'பண்தி சோர் திவாஸ்' என்ற பெயரில் கொண்டாடுகின்றனர். சீக்கியர்களின் ஆறாவது குருவான ஹர்கோபிந்த், முகலாய மன்னர் ஜஹாங்கீரின் சிறைப்பிடியில் இருந்து தப்பிய நாள் இதுவாகும். மேலும், இதே நாளில் தான் அமிர்தசரஸ் பொற்கோவிலுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

•

– **விகடன்**

தீபாவளித் திருநாளானது, அந்தப் பண்டிகையைக் கொண்டாட மட்டுமின்றி, சில பூஜைகளை செய்யவும் ஏற்ற நாளாக அமைந்திருக்கிறது. தீபாவளித் திருநாளில் இல்லத்தில் செய்யப்பட வேண்டிய பூஜைகளில் சிலவற்றை இங்கே பார்ப்போம்.

# தீபாவளி தினத்தில் செய்ய வேண்டிய பூஜைகள்!



## மகாலட்சுமி பூஜை

திருமகளான லட்சுமிதேவி அவதரித்த நாளாக, தீபாவளி சொல்லப்படுகிறது. எனவே அன்றைய தினம், வீட்டு பூஜை அறையில் மகாலட்சுமி படத் தை வைத்து, அதனை மலர்களால் அலங் கரிக்க வேண்டும். பின்னர் சர்க்கரைப் பொங்கலை நைவேத்தியமாக படைத்து, தீப தூபங்களால் ஆராதனை செய்து வழிபடுங்கள். இதனால் திருமணம் கைகூடும். வீட்டில் லட்சுமி கடாட்சமும் வந்துசேரும்.

## குபேர பூஜை

செல்வத்திற்கு அதிபதி மகால ட்சுமி என்றாலும், அவற்றைப் பிரித்து வழங்கும் நிதிகள் அனைத்தும் குபேரனின் வசம் இருப்பதாக புராணங்கள் சொல்கின்றன. அந்த நிதிகளுக்கு அதிபதியாக குபேரன் பொறுப்பேற்ற தினமாக தீபாவளி இருக்கிறது. எனவே அன்றைய தினம், குபேரன் படத்தை வீட்டில் வைத்து, அதன் இரண்டு பக்கமும் குத்துவிளக்கேற்றி வைத்து, குபேரனுக்கு இனிப்பு பலகாரங்களை நைவேத்தியமாக படைத்து வழிபடுங்கள். இதனால் செல்வ வளம் தேடிவரும்.

## கேதார கவுரி விரதம்

சிவபெருமானை நினைத்து பார்வதி தேவி வழிபட்டு பலன் பெற்ற தினம், தீபாவளி. அந்த விரதத்தை ‘கேதார கவுரி விரதம்’ என்பார்கள். சிவ பார்வதி படத்தை வீட்டில் வைத்து வழிபாடு செய்தால் தம்பதியருக்குள் ஒற்றுமை பலப்படும். இல்லற வாழ்வு சிறப்பாக அமையும். சிவ பார்வதி படத்திற்கு பதிலாக, அர்த்தநாரீஸ்வரர் படத்தை வைத்து வழிபடுவது இன்னும் சிறப்பு சேர்க்கும்.

## சத்யபாமா பூஜை

நரகாசுரன் வதம் செய்யப்பட்ட தினம் தீபாவளி. நரகாசுரனின் தாய் பூமாதேவியாவார். நரகாசுரனுக்கு அவனது தாயால்தான் மரணம் என்பது வரமாக அளிக்கப்பட்டிருந்தது. எனவே பூமாதேவியின் அம்சமாக கிருஷ்ண அவதாரத்தின் போது தோன்றியவர், சத்யபாமா. அவர்தான்



கிருஷ்ணருடன் சேர்ந்து நரகாசுரனை அழித்தார். எனவே தீபாவளி அன்று, சத்யபாமாவை வீர லட்சுமியாக பாவித்து பூஜித்து வணங்க வேண்டும்.

### முன்னோர் வழிபாடு

துலா மாதமாக சொல்லப்படும் ஐப்பசி மாத அமாவாசை தினம், முன்னோர் வழிபாட்டிற்குரிய முக்கியமான தினமாகக் கருதப்படுகிறது. அவரவர் இல்லத்தில் முன்னோரை நினைத்து இயன்ற அளவு அன்னதானம் செய்வதும், ஆடை தானம் செய்வதும் குடும்பத்தில் மகிழ்ச்சியை வரவழைக்கும்.

### குலதெய்வ பூஜை

நாம் எத்தனை தெய்வங்களை வழிபட்டாலும், அவை எதுவும் குலதெய்வ வழிபாட்டிற்கு ஈடாகாது. குலதெய்வத்தை வணங்கினாலே, அனைத்து தெய்வங்களையும் வழிபட்ட பலன் கிடைத்து விடும். ஒருவரின் குடும்பம் சீராகவும், நல்ல முறையிலும், சச்சரவுகள் இன்றியும் நடைபெற குலதெய்வத்தின் ஆசிர்வாதம் அவசியமானது. எனவே எந்த பண்டிகையாக இருந்தாலும், வீட்டில் குலதெய்வத்தின் படத்தை வைத்து, முதலில் அவரை வணங்கி விட்டு, பிறகு மற்ற தெய்வங்களை வழிபாடு செய்யுங்கள். எல்லா நன்மைகளும் வந்துசேரும்.


**அருள் ராஜயோகம், ஆன்மீகம் ஜோதிட மருத்துவ மாத இதழ்**
**புது எண் 139, பழைய 7, பண்ணா பிளசா, ஆற்காடு ரோடு**
**கோடம்பாக்கம், சென்னை-600 024**

அன்புடையீர்,

அருள் ராஜயோகம் மாதஇதழுக்கு ஆயுள் சந்தா ரூ. 5000/- செலுத்த விரும்புகிறேன். மாதா மாதம் இதழ்களை அனுப்பி வைக்கவும். நன்றி!

பெயர் ; ______________________

முகவரி ; ______________________

______________________

______________________

பணம் செலுத்தும் விவரம் (டிக் செய்து விபரங்களை குறிப்பிடவும்)

☐ பணவிடை ____________ ☐ காசோலை ____________

☐ கேட்போலை ____________ ☐ ரொக்கம் ____________

## சந்தாப் படிவம்



# வாழ்வை வளமாகும் சஷ்டி விரதம்

முருகருக்கு உகந்த விரதங்களில் முக்கியமானது இந்த சஷ்டி விரதம் தான். இதில் இரண்டு வகை உண்டு. ஒன்று மாதத்தில் வரக்கூடிய சஷ்டி விரதம் .இதை சஷ்டி திரி துவங்கும் நேரம் முதல் சஷ்டி திதி முடியும் நேரம் வரை விரதம் இருந்து முருகனை வழிபாடு செய்வார்கள. இதில் தீபாவளி தொடர்ந்து வரக்கூடிய சஷ்டி திதியை தான் மகா கந்த சஷ்டி விரதம் என்று சொல்வார்கள். இந்த விரதத்தை இன்றைய காலக்கட்டத்தில் பெரும்பாலானூர் கடைப்பிடித்து வருகிறார்கள். ஆனால் இதை யார் கடைபிடிக்க வேண்டும்? எப்படி கடைபிடிக்க வேண்டும்? என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்பதில் பலருக்கும் பல சந்தேகம் உள்ளது. அதைப் பற்றிய சில தகவல்களை இந்த ஆன்மீகம் குறித்த பதிவில் நாம் தெரிந்து கொள்ளலாம்.

### மகா கந்த சஷ்டி விரதம் இருக்கும் முறை

முதலில் இந்த சஷ்டி விரதம் எப்படி இருக்க வேண்டும் என்பதை பற்றி தெரிந்து கொள்ளலாம். இந்த சஷ்டி விரதமானது பல வழிமுறைகளில் இருக்கலாம். அதாவது நாள் முழுவதும் தண்ணீர் மட்டும் அருந்தி விட்டு இருக்கலாம். அடுத்து பால், பழ விரதம் அதாவது பால் பழம் இரண்டை மட்டும் நாள் முழுவதும் எடுத்துக் கொண்டு விரதம் இருக்கலாம். மூன்றாவதாக இளநீர் விரதம். இளநீரைத் தவிர வேறு எதுவும் சாப்பிடாமல் இருப்பார்கள். இதில் இன்னொரு முறை ஒரே ஒரு வேலை மட்டும் உணவு அருந்தி விட்டு விரதம் இருப்பார்கள். முருகருக்கு

# வேல்மாறல்

திருத்தணியில் உதித்தருளும் ஒருத்தன்
மலை விருத்தன் எனது உளத்தில் உறை
கருத்தன்மயில் நடத்து குகன் வேலே



வைக்கும் நெய்வேத்தியத்தை மட்டும் உண்டும் விரதம் இருக்கலாம். இவை அனைத்திலும் விட கடுமையான முறை ஒன்று உள்ளது. அது தான் மிளகு விரதம் இருக்கும் விரதங்களில் இது தான் மிகவும் கடுமையானதாக சொல்லப்படுகிறது. முதலாம் நாள் விரதம் துவங்கும் நாள் ஒரு மிளகும் இரண்டாம் நாள் இரண்டு மிளகு மூன்றாம் நாள் மூன்று மிளகு என ஆறு நாட்களும் ஒவ்வொரு மிளகாக அதிகரித்து ஆறாவது நாள் ஆறு மிளகு மட்டும் சாப்பிடும் வழிபாடு உள்ளது. முருகனை வழிபாடு செய்ய எத்தனை வழிமுறைகள் இருந்தாலும் இது அவரவரின் உடல் நிலையை பொறுத்து தான் இந்த விரத முறைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதை கவனத்தில் கொள்ளுங்கள்.

இதில் எந்த விரதங்களை மேற்கொண்டாலும் தண்ணீரை அதிக அளவில் குடிக்க வேண்டும் தண்ணீர் குடிக்காமல் எந்த விரதத்தையும் கடைபிடிப்பது நல்லதல்ல. அதே போல் இந்த விரதத்தை உடல் நலம் இல்லாதவர்கள் தொடர்ந்து மருந்து மாத்திரை உண்பவர்கள் இருப்பதை தவிர்ப்பது நல்லது மேலும் கர்பிணி பெண்கள், வயதானவர் இந்த விரதத்தை தவிர்த்து விட்டு முருகனை மனதார நினைத்து வழிபாடு செய்வது நல்லது. இந்த விரதம் இருக்கும் பொழுது நாம் கடைப்பிடிக்க வேண்டிய முக்கியமான ஒன்று மனதை ஒருநிலைப்படுத்தி முருகனை மட்டும் நினைத்து வழிபாடு செய்ய வேண்டும். இந்த விரத நாட்களில் நாம் யார் மீதும் கோபம் கொள்ளக் கூடாது. வீண் விவாதங்கள் சண்டை போன்றவற்றை தவிர்ப்பது நல்லது. இந்த கந்த சஷ்டி விரதம் ஆறாவது நாள் சூரசம்காரத்துடன். அன்றைய தினத்தில் விரதத்தை முடிப்பவர்களும் உண்டு. சிலர் ஏழாவது நாள் திருக்கல்யாணம் முடிந்த பிறகு விரதத்தை முடிப்பதும் உண்டு. இது அவரவரின் விருப்பத்திற்கு ஏற்ப அமைத்துக் கொள்ளுங்கள். இந்த விரத நாட்களில் காலையில் பிரம்ம முகூர்த்த நேரத்தில் எழுந்து வீட்டின் பூஜையறையில் அகல் விளக்கில் நெய் தீபம் ஏற்றி முருகரின் படத்திற்கு முன்பாக அமர்ந்து வழிபாடு செய்யுங்கள். இப்படி ஏற்றும் தெய்வமானது சர்கோண கோலமிட்டு அதில் அகல் விளக்கு ஏற்றுவது சிறந்தது. அந்த நேரத்தில் கண்டிப்பாக முருகரின் மந்திரங்கள், கந்த சஷ்டி கவசம், கந்த குரு கவசம் போன்றவற்றை சொல்லுங்கள். இது மிகவும் அவசியம். முருகர் வழிபாட்டின் போது உங்களால் முடிந்த எளிமையான நெய்வேதியத்தை செய்து வைத்து வழிபாடு செய்யுங்கள்.

இந்த விரதத்தை வீட்டில் இருந்து கடைபிடிப்பவர்களும் உண்டு ஒரு சிலர் முருகரின் அறுபடை வீடுகளில் ஏதேனும் ஒன்றில் தங்கி விரதம் இருப்பவர்களும் உண்டு இதுவும் அவரவரின் சூழ்நிலைக்கேற்றவாறு அமைத்துக் கொள்ளுங்கள். இந்த விரத நாட்களில் உங்களால் முடிந்தால் யாரேனும் ஒருவருக்கு தினம் அன்னதானம் செய்யுங்கள் இதை முருகரின் அருளை பரிபூரணமாக பெற உதவும்.

– கோதை

**அருள் ராஜயோகம்**

மலர்-12 இதழ்-4 அக்டோபர்:2025



வெளியிடுபவர் / ஆசிரியர்

**SRJ "ராஜயோகம்"**

**Dr. K. RAMAAYYAPPAN** Ph.D., (USA)



**அருள் ராஜயோகம்**

ஆன்மிக, ஜோதிட, மருத்துவ மாத இதழ்



புது எண் 139, பழைய எண் 7,
பன்னா பிளாசா, ஆற்காடு ரோடு,
கோடம்பாக்கம், சென்னை - 24.

தொலைபேசி எண் ; 044-24849187

அலைபேசி எண்கள் ;

**99404 31377 / 96772 76129**
**99529 91118 / 98401 60068**

e-mail : **arulrajayogam@gmail.com**
website : **www.arulrajayogam.com**


ஜோதிடம், ஆன்மீகம், மருத்துவம் சம்பந்தமான தங்களின் படைப்புகளையும், புகைப்படங்களையும் அனுப்பி வைக்கவும். ஆசிரியர் குழுவின் பரீசீலனைக்குப் பிறகு பிரசுரிக்கப்படும்.

**ஆயுள் சந்தா ரூ. 5000/-**

# தீபாவளி பண்டிகையின் போது திறக்கப்படும் அதிசய கோவில்!



**கர்நாடக மாநிலத்தில் உள்ள ஹாசனாம்பா கோவில், தீபாவளி பண்டிகையின் போது மட்டும் நடை திறகப்படும் விசேஷமிக்க கோவிலாகும்.**

*இந்த கோவிலில் ஆண்டுக்கு ஒரு முறை, அதாவது 10 நாட்கள் மட்டுமே நடை திறந்து பூஜை நடத்தப்படும் என்பது சிறப்பம்சமாகும். அதாவது தீபாவளி பண்டிகையை முன்னிட்டு புரட்டாசி மாதம் இறுதி முதல் ஐப்பசி மாதம் முதல் வாரத்திற்குள் வரும் பவுர்ணமிக்கு அடுத்த வியாழக்கிழமை கோவில் நடை திறக்கப்பட்டு, அமாவாசைக்கு அடுத்த 3 ஆவது நாள் கோவில் நடை சாத்தப்படுவது வழக்கமாக உள்ளது. அதாவது 10 நாட்களும் இரவு முழுவதும் நடைசாத்தப்படாமல் திறந்தே இருக்கும். கோவில் நடை திறக்கப்படும் முதல் நாளில் ஹாசன் மாவட்டம் மட்டும் இன்றி மாநிலம் முழுவதில் இருந்தும் பக்தர்கள் கோவிலுக்கு வருவார்கள். தலவார் குடும்பத்தினர் கர்ப்பகிரகத்துக்கு எதிரே வாழைத் தண்டுகளை நட்டுவைத்து, ஹாசனாம்பாவை பயபக்தியுடன் பஜனைகள் பாடுவார்கள். பின்னர் அந்த வாழைத்தண்டுகளை வெட்டியதும், கோவில் நடை திறக்கப்படுவது இன்று வரை நடைமுறையில் இருக்கும் ஐதீகமாகும். இந்த விழாவில் தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, தெலுங்கானா மாநிலங்களை சேர்ந்த பக்தர்கள் வந்து அம்மனை வழிபட்டு செல்வார்கள். கோவிலிலுள்ள அம்மனை வழிபாடு செய்தால் வேண்டியது அனைத்தும் நிறைவேறும் என்பது பக்தர்களின் நம்பிக்கையாக உள்ளது. இந்த கோவில் 12 ஆம் நூற்றாண்டில் கிருஷ்ணப்பா நாயக்க பாளையக்காரனின் காலத்தில் கட்டப்பட்டது. சப்த கன்னியர்களான பிரம்ஹிதேவி, மகேஸ்வரி, கவுமாரி, வைஷ்ணவி, வராகி, இந்திராணி, சாமுண்டி ஆகியோர் வாரணாசியில் இருந்து தெற்கு பகுதிக்கு புத்துணர்வுக்காக வலம் வந்தார்கள் என்றும், அந்த சப்த கன்னியர்களில் வைஷ்ணவி, கவுமாரி, மகேஸ்வரி அம்மன்கள் ஹாசனாம்பா கோவிலில் மண்புற்றின் வடிவத்தில் நிலைத்தார்கள் என்றும், பிரம்ஹிதேவி கெஞ்சம்மனின் புதுக்கோட்டையில் நிலைக்கொண்டிருக்கிறார் என்றும், சாமுண்டி, வராகி, இந்திராணி ஹாசன் நகரில் உள்ள தேவி கெரேயில் நிலைகொண்டு இருப்பதாகவும் பக்தர்களால் நம்பப்படுகிறது. இந்த கோவிலுக்கு சென்று வழிப்பட்டால் ஆண்டு முழுவதும் நம்மை தீய சக்திகள் நெருங்காது என்று நம்பப்படுகிறது. இந்த கோவில் நவம்பர் 1 முதல் 9 வரைதிறக்கப்பட்டிருக்கும்.*


Owned & Published by **K.RAMAAYYAPPAN** Published from N.No 139, O.No. 7, Panna Plaza, Arcot Road, Kodambakkam, Chennai - 600 024 and Printed by Mrs. **R.RADHA,** at **APSARA ART PRINTERS**, 18 (N.No. 67), P.V.Koil I Street, Pudupet, Royapettah, Chennai - 600 014. Editor : **K.RAMAAYYAPPAN.**

# அற்புத ஆற்றல்களை அள்ளித்தரும் அருட்பெரும் நூல்கள்

## ஜோதிடர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்!

## சூட்சுமத்தை உணர்த்திடும் அருட்பிரசாதம்!!

AP 001




ரூ.350/-

AP 002




ரூ.350/-

AP 003




ரூ.250/-

AP 004




ரூ.300/-

**8 நூல்களும் இணைந்த (COMBO OFFER)**

முந்துங்கள்! இச்சலுகை குறிப்பிட்ட காலம் வரை

~~ரூ. 3400/-~~

**ரூ. 3100/-**

AP 005




ரூ.550/-

AP 006




ரூ.425/-

AP 007




ரூ.425/-

மேலும் தனி புத்தகம் வேண்டுவோர் அந்தந்த புத்தகத்திற்குரிய தொகையை கீழ்கண்ட எமது வங்கி கணக்கில் பணம் செலுத்திவிட்டு தொடர்புக்கொள்ளவும் புத்தகம் உங்களுக்கு பதிவுத் தபால் (Regd. Parcel) மூலம் அனுப்பி வைக்கப்படும். கொரியர் மூலம் அனுப்ப இயலாது

**செல்: 72999 21880 / 88386 38900**

பணம் அனுப்ப வேண்டிய Bank Details

1. C. Raju & R. Radha,
   Post Office Savings Bank
   A/C No. 3610336507 (Chennai-14)
2. C. Raju & R. Radha,
   Karur Vysya Bank
   (Whites Road, Chennai-14)
   A/C No. 1219172000006855,
   IFSC - KVBL0001219
3. C. Raju & R. Radha,
   Tamilnad Mercantile Bank
   (Chennai TTK Road-Royapettah)
   A/C No. 123100050303219,
   IFSC - TMBL0000123
4. Apsara Publications,
   IDBI Bank
   (Chennai-Gopalapuram)
   A/C No. 1654102000000143,
   IFSC - IBKL0001654
5. C. Raju, Indian Bank
   (Chennai-Royapettah)
   A/C No. 426677897,
   IFSC - IDIB000R021




AP 008 ரூ.750/-

**ARUL RAJAYOGAM** TAMIL MONTHLY Registrar of Newspaper for India No. TNTAM/2014/57494 Registered: TN/CC(S) DN 521/24-26. Posted at Patrika Channel Egmore RMS. Date of Publication: 1st week of every month. DATE OF POSTING: September 21-27

"திக்கற்ற யாவரும்" "ஒப்பற்ற பயன்பெற"



"27 நட்ஷத்திரங்களை"
உள்ளடக்கிய "12 ராசிகளுக்கான"
தினப்பலன்கள்
அனைவருக்குமே அனுதினமும் "ராஜயோகம்" தரக்கூடிய
"ஆன்மீக அதிர்ஷ்ட மந்திரம்"
மற்றும் "ஆன்மீக தகவல்கள்"
தெரிந்துகொள்ள:

YouTube

R ராஜயோகம் டிவி

ஆழமான "ஆன்மீகத்தையும்" அறிய வேண்டிய "சாஸ்திரத்தையும்"
அற்புதமான "மனோ திடத்தையும்" அனுதினமும் வாரி வழங்கும்.

SRJ "ராஜயோகம்" Lion Dr.K.Ram Ph.D (USA)

S R J GEMS™ JEWELLERS

எங்கேயும் எப்போதும் SUCCESS

Singapore Malayasia Srilanka Australia London